உ பரமபதி துணை.

யாகோபு S 280

திருவாய் மலர்ந்தருளிய

# வைத்தியம் 300.

சரக்கு சுத்தியும் நாடி விபரமும் சேர்ந்தது.

இஃது

மதுரை யானைக்கல் தெரு வித்வான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை யவர்கள்

ஏட்டுப் பிரதியின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதித்த பிரதிக்கிணங்க

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார் சன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை ] 1941 [0—14—0

மூன்றாம் பதிப்பு. ரிஜிஸ்டர் காபிரைட்.

S 280

# யாகோபு வைத்தியம் 300

## அட்டவணை.


| | பக்கம் |
|---|---|
| நூல்வரலாறு | 1 |
| வீரஞ்சுத்தி | 4 |
| பூரஞ்சுத்தி | 5 |
| லிங்கஞ்சுத்தி | 5 |
| இரசஞ்சுத்தி | 6 |
| வெள்ளைப்பாசாணசுத்தி | 7 |
| பாசாணசுத்தி | 7 |
| பாசாண அறுபத்து நாலுக்குஞ்சுத்தி | 8 |
| மிருதார்சிங்கிசுத்தி | 9 |
| கௌரிசுத்தி | 10 |
| மனோசிலைசுத்தி | 10 |
| கெந்தகசுத்தி | 11 |
| தாளகசுத்தி | 11 |
| அயத்தொட்டிப் பாசாணசுத்தி | 12 |
| தொட்டிப் பாசாணசுத்தி | 13 |
| பொன்னிமிளை சுத்தி | 13 |
| கெருடப்பச்சைசுத்தி | 14 |
| சிலாசத்தின்சுத்தி | 14 |
| சல்நார்சுத்தி | 15 |
| சீனக்காரஞ்சுத்தி | 15 |
| படிக்காரஞ்சுத்தி | 15 |
| வெண்காரஞ்சுத்தி | 16 |
| முடிதாரச்சுத்தி | 16 |
| பால்துத்தஞ்சுத்தி | 16 |
| துருசுசுத்தி | 17 |
| பச்சைத்துருசு சுத்தி | 17 |
| மடல்துத்தஞ்சுத்தி | 17 |
| பவளப்புத்துசுத்தி | 18 |
| அஞ்சனக்கல்சுத்தி | 18 |
| கல்மதஞ்சுத்தி | 18 |
| சகஸ்ரபேதிசுத்தி | 18 |
| வங்கசுத்தி | 19 |
| கருவங்கஞ்சுத்தி | 19 |
| நாகசுத்தி | 20 |
| இரும்புசுத்தி | 20 |

| | பக்கம் |
|---|---|
| காந்தசுத்தி | 21 |
| நாபிக்கிழங்கின் சுத்தி | 21 |
| தாமிரசுத்தி | 22 |
| குதிரைப்பல் பாஷாணசுத்தி | 22 |
| குக்கில்சுத்தி | 23 |
| குந்தரிக்கஞ்சுத்தி | 23 |
| நேர்வாளஞ்சுத்தி | 23 |
| சேங்கொட்டைசுத்தி | 24 |
| எட்டிக்கொட்டைசுத்தி | 24 |
| ஊமத்தைசுத்தி | 25 |
| அமுக்கிராக்கிழங்குசுத்தி | 25 |
| சிவதைசுத்தி | 25 |
| சுக்குசுத்தி | 25 |
| மிளகுசுத்தி | 26 |
| திப்பிலிசுத்தி | 26 |
| எள்ளெண்ணெய்சுத்தி | 26 |
| ஓமஞ்சுத்தி | 26 |
| சீரகசுத்தி | 26 |
| கொம்பரக்குச்சுத்தி | 26 |
| பவளத்துத்திசுத்தி | 27 |
| நாடிவிபரம் | 27 |
| மரணக்குறிநாடி | 30 |
| சாத்தியஅசாத்தியநாடி | 30 |
| வாதநாடியின்குணம் | 31 |
| பித்தநாடியின்குணம் | 34 |
| சிலேற்பனநாடியின்குணம் | 39 |
| பூதநாடியின்குணம் | 40 |
| ஐயநாடியின்குணம் | 40 |
| வியாதிவரும்விபரம் | 43 |
| வாதசுரத்திற்குக்கஷாயம் | 45 |
| சிலேற்பனசுரத்திற்கு கியாழம் | 46 |
| சுரம் இளைப்பு அசதிக்குக் கஷாயம் | 47 |
| சுரவீக்கத்திற்கு கஷாயம் | 48 |
| பழையசுரத்திற்குக்கியாழம் | 50 |

| | பக்கம். |
|---|---|
| ஷைக்கு நெய் | 51 |
| குளிர்சுரம்வாந்திக்குக்கியாழம் | 52 |
| கணைச்சுரத்திற்குக்கியாழம் | 54 |
| மாந்தக்கழிச்சலுக்குக் கியாழம் | 55 |
| மூன்றுமுன்றைக்காய்ச்சலுக்கு | 5; |
| ஷைக்குகசியம் | 56 |
| ஷைக்குஆக்கிராணம் | 56 |
| அண்டவாதத்திற்கு | 59 |
| எரண்டவாதக்கியாழம் | 60 |
| விரைவாதத்திற்கு | 62 |
| சகல வாதத்திற்கும் | 62 |
| முழங்கால் வாதத்திற்கு | 63 |
| மூன் வாதத்துக்குமருந்து | 64 |
| வாதத்திற்கு | 64 |
| முகவாதத்திற்கு | 64 |

| | பக்கம். |
|---|---|
| சுளுக்கு வாதத்திற்கு | 66 |
| கடுப்புவாதத்திற்குத்தைலம் | 66 |
| குடல்வாதத்திற்குத்தைலம் | 69 |
| மண்டைச்சூலைக்கு | 71 |
| பைத்திய தோஷத்திற்கு | 71 |
| பேதிக்கு மருந்து | 73 |
| மூலச்சூட்டுக்கு | 75 |
| மூலவாயுவுக்கு மருந்து | 75 |
| வாந்தி பேதிக்கு | 76 |
| அரோசிகத்துக்கு | 77 |
| வாய்ச்சூலைக்கு மருந்து | 77 |
| வெள்ளை வீழ்தலுக்கு | 78 |
| மேகவூறலுக்கு | 78 |
| இளைப்புக்கு மருந்து | 79 |
| விக்கலுக்கு மருந்து | 79 |
| பெரும்பாட்டுக்கு மருந்து | 80 |



யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

## கோர்வை நூல்களின் விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வைத்திய சிந்தாமணி 700ம் ஷை சூஸ்திரம் 50ம் சேர்ந்தது. | 1 | 2 | 0 |
| 2 | ஷை செந்தூரம் 300 | 0 | 9 | 0 |
| 3 | ஷை சூஸ்திரம் 155ம் சுண்ணசூஸ்திரம் 55ம் சேர்ந்தது | 0 | 8 | 0 |
| 4 | ஷை சுண்ணக்காண்டம் 600 | 1 | 0 | 0 |
| 5 | ஷை சுண்ணம் 300 | 0 | 9 | 0 |
| 6 | ஷை சூஸ்திரம் 155ம், செந்தூர சூஸ்திரம் 57 சேர்ந்தது | 0 | 8 | 0 |
| 7 | ஷை வாதசூஸ்திரம் 400 | 0 | 12 | 0 |
| 8 | ஷை வயித்தியம் 300 | 0 | 9 | 0 |
| 9 | ஷை வாதவைத்தியக் களங்கு 300 | 0 | 9 | 0 |
| 10 | ஷை பஞ்சமித்திரம் 300 | 0 | 9 | 0 |
| 11 | ஷை தண்டகம் 110ம் வயித்தியம் 55ம் இடைபாகம் 16ம் செய்பாகம் 16ம் சேர்ந்தது | 0 | 8 | 0 |
| 12 | கல்லாடம் உரையும் ஷை சாத்திர உரையும் | 0 | 12 | 0 |

இந்த 17 சாஸ்திரமும் சேர்ந்த யாகோபு கோர்வை கலிக்கோ பயிண்டு புத்தகம் 1-க்கு ரூ. 9 0 0

இப்படிக்கு,

**இ. ராம. குருசாமிக்கோனர் சன்,**

புத்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

# வைத்தியம் 300.

காப்பு.

ஆரணத்து ளமர்ந்திடு சோதியை
தாரணத்துள் சதாதொழு தேத்தியே
காரணக்குரு வாகிய கர்த்தனைப்
பூரணத்திற் பொருந்தியே போற்றுவாம்

ஏகமான வெளிக்குள் வெளியதாய்ப்
பாகமாக பரிந்திடு சோதியைத்
தாகமாகவே தான்தொழு தேத்தியே
யோகமாகவே யுள்நினைந் தோதுவாம்

ஆதிநாத னமைத்த படைப்பினில்
பேதியாமற் பிறந்த வைத்தியம்
ஓதித்தேர உருக்குமா னுக்கிதை
நீதியாக நிறைப்படி சொல்லுவேன்

நூல் வரலாறு.

ஆதியிலே இராமனென்று பேரும்பெற்று
அன்புடனே சதுரகிரி தனிலிருந்து
நீதியுட னக்கனமாய் மக்கஞ்சென்று
நேர்மையுட னபிமாரைக் கண்டுபோற்றி
கோதில்லா தங்கிருக்கும் போதெனக்குக்
கொடுத்தார்கள் நபிமார்கள் யாக்கோபென்று
வாதியென்று உலகோர்கள் சொல்லவேதான்
மக்காவிற் றானிருந்து பின்புதானே (1)

தானென்ற மக்காவி லனேகநூல்கள்
தக்கபடி சொல்லிவைத்து அதைவிட்டேகி
தேனென்ற சதுரகிரி மத்திவந்தேன்
திருமூலர் கண்டென்னை யிருக்கவைத்தார்
நானென்று அங்கிருக்கும் போதுசித்தர்
நலமாக வந்தென்னைக் கண்டுகொண்டு
கோனென்றே நானிருந்த இடந்தனக்குக்
கொடுத்தார்கள் துலுக்கன் மொட்டை யென்றுபேரே

பேரான துலுக்கன்மொட்டை தனிலிருந்து
பிரபலமாய் வகாரவித்தை யனேகஞ்செய்து
நேரான பள்ளியொன்று யிங்கமைத்து
நேர்மையுடன் ருனிருக்கும் போதுதானும்
சீரான ருக்குமா னிவடந்தன்னிற்
தேடியென் னிடம்வந்து இருந்துகொண்டு
கூராக வாதவைத் தியங்கள்கேட்கக்
குறிப்புடன் சொலக்கேட்டு மகிழ்வுற்றுரே. (3)

மகிழ்வுற்று யென்னிடத்தி லிருக்குமாறும்
வகையாகத் தானிருந்து வருகும்போது
அகமகிழ்வாய் இதுகாருஞ் சொன்னதெல்லாம்
அன்புடனே தான்கேட்டேன் சரக்குச்சுத்தி
சுகமாக கைநாடி வைத்தியங்கள்
சூட்சமுள்ள மந்திரங்கள் சரசாஸ்திரங்கள்
புகழாக வியாதிவருங் குணங்கடன்னைப்
பூரணமாய் யெந்தனுக்கு இயம்புவீரே. (4)

இயம்பென்ற ருக்குமான் றனக்குத்தானும்
இனிமையுடன் யாக்கோபு இயம்புகின்றேன்
நயம்படவே வாதவைத் தியங்கள் சொன்னேன்
நல்லதொரு பஸ்பஞ்செந் தூரஞ்சொன்னேன்
சுயமாக சுண்ணத்தின் யோககுரு சொன்னேன்
துய்யநல்ல நவலோகக் களங்குஞ்சொன்னேன்
மயமாகத் திராவகத்தின் மார்க்கஞ்சொன்னேன்
மந்திரஉச் சாடணத்தை வாகாய்க்கேளே. (5)

வாகாக மந்திரஉச் சாடணங்கள்
மயமாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
ஆகமவி லாசமாய்க் கோடுபோடு
அறுபத்து நாலு அறை வீடுகீறு
ஏகவெளி சுத்தியே சூலம்போடு
எழுதுபிஸ் மில்லாகி ஹகமதாக
யோக அசரத்து சய்யதப்துல்
உற்ற காதர்சயி லாணியென்றே. (6)

என்ற அபூலணி பிதனில்லாஹீம்
எழுதுவீர் ரஹீம்ஹய ராஹீம்ருஹீம்
நன்று யல்லா யாராஹீம்
நாட்டுவாய் ரஹிமான் என்குருவை
இன்றே சூனியம் விஷங்களுக்கு
யிதமாய் வகைப்படி குறித்தெழுதி
அன்றே ஓம்நம சிவாயாஓம்
ஹரிஓம் நமசிவாயசிவா நமசிவாயவென்றே. (7)

சங்குசங் கென்றேயி ரண்டிடத்தில்
தவறும லங்கே யெழுதவேணும்
சிங்குசிங் கென்றேயி ரண்டிடத்தில்
சேரவே யெழுதிக்கொள் ளதின்கீழே
வங்குவங் கென்றே இரண்டிடத்தில்
வகையா யெழுது அச்சரத்தை
பங்கமில் லாமல்வசி நசிமசியென
பார்த்துத் தான்கீழே யெழுதிவிடே. (8)

போட்டுமே அச்சரமந் திரமுந்தானும்
புகழாக யெழுதியே கட்டவென்றால்
காட்டோலைத் தாம்பூரத் தகட்டிலேனுங்
காரீயத் தகடடித்து யெழுதவேணும்
கூட்டிமடக் கியேநூல்கள் சுத்தவேணும்
கூறுடனே பத்துமுடித் தேமுடிந்து.
நாட்டுச் சாம்பிராணித் தூபமிட்டு
நன்றாய் நசலுக்குக் கட்டிவிடே (9)

விடமதுவும் போய்விடும் ஏவலோடும்
வெடிபில்லி சூனியமும் பார்வைபோகும்
திடமுடனே யெவ்வேலைக் கெழுதினாலும்
தீரமுட னிப்படியே யெழுதிக்கட்டு
தடதடன எந்திரத்தில் மந்திரமோதத்
தடையிலா நசலெல்லாம் பறந்தேபோகும்
படமெடுத்தா டியபாம்பு மொடுங்கிப்போகும்
பரிவான சூனியமும் பறக்குந்தானே. (10)

சூனியத்தா லரட்டிபயம் மனதில்திக்குச்
சொல்லாம லோடிவிடு மிதுகளெல்லாம்
ஆனிநல்ல எந்திரமந் திரங்கள்தன்னை
அடைவாகச் சொல்லிவிட்டே னருமையாக
ஊணியேமனதிலு லுருத்தான் போட்டு
உண்மையுடன் வேம்பிலையுஞ் சாம்பலாலும்
பாணியிலும் ஓதிடுவிம் மந்திரத்தைப்
பண்பாம்வஞ் சனைபேய்கள் பறக்குந்தானே (11)

பறக்குமென்று சொன்னதெல்லாம் பொய்யாகாது
பண்புடனே அனுதினமும் உருவேபோடு
சிறக்கவே சொல்லிவிட்டே னருமையாகச்
செய்தரிந்து பார்த்துக்கோ தீரமாக
நிறக்கவே நபிமாரைத் தொழுதுபோற்று
நிச்சயமாய்ச் சுண்ணச்செந் தூரஞ்செய்ய
இறக்கமுடன் பாசாணச்சுத்தி யெல்லாம்
இனிமையுட னுந்தனுக்கு இயம்புவேனே. ()

வீரஞ்சுத்தி முறை

இயம்புவேன் சுத்திமுறை விபரந்தன்னை
எல்லாமுஞ் சொல்லுகிறேன் விபரமாக
நயம்படவே வீரமது சுத்திகேளு
நல்ல இளநீரிற்கற் பூரம்போட்டு
சுயம்பான சட்டியிலே கலக்கிக்கொண்டு
தொளாந்திரமாய் வீரத்தைக் கட்டியேதான்
மயமாக அடுப்பேத்தி யெரித்துக் கொண்டால்
வலுவான வீரமுந்தான் சுத்தியாச்சே. (13)

இ-ரை வீரத்தை வாங்கி ஒரு இளநீர் தண்ணீரை விட்டு ஒன்னே கால் விராகனிடை கற்பூரம் வாங்கிப்போட்டுக் கலக்கி சட்டியிலூத்தி அடுப்பேத்தி ஷை வீரத்தை தொளாந்திர மாகக்கட்டி யெரித்து யெடுக்கச் சுத்தியாகும்.

### பூரஞ்சுத்தி

சுத்திதான் பூரமதைச் செய்யுதற்குச்
சுயமாம்வெற் றிலைமிளகுக் கியாழமிட்டுப்
புத்தியாய் பூரத்தைக் கிளிதான்கட்டிப்
புகழாக மூன்றுநா ளூரவைத்துச்
சித்தியுடன் றானெடுத்துப் பூரந்தன்னைத்
திரமாகக் காயவைத்து யெடுத்துக்கொண்டு
நத்தியே சுண்ணச்செந் தூரஞ்செய்ய
நலமாகும் வியாதிக்குக் கொடுத்துப்பாரே. (14)

இ-ரை பூரத்தைவாங்கி வைத்துக்கொண்டு ஒரு சட்டியில் வெற்றிலையைக்குருக அரிந்துபோட்டு மிளகும் உடைத்து அத்துடன் போட்டு அரைப்படி தண்ணீர் விட்டுக் கியாழமாக்கி அதில் பூரத்தைக் கிளிக்கட்டி மூன்றுநா ளூறவைத்தெடுத்துக்கொள்ளச் சுத்தியாகும்.

### லிங்கசுத்தி

பாரேயோர் கட்டியாய் லிங்கம்வாங்கிப்
பகரொருநாள் தேனதிலே யூரப்போட்டு
நேரேதா னதையெடுத்து அமூர்தப்பாலில்
நேர்மையுடன் றானொருநா ளூரப்போட்டு
சீரேதான் எலுமிச்சம் பழச்சாரோடு
சிறந்தகுப்பை மேனிச்சா ரமுதப்பாலும்
காரேதான் மூன்றையுமே சேர்த்துவைத்துக்
கருத்தாக அடுப்பிலே சட்டியேத்தி
தாரேலிங் கத்தைச்சட் டியிலேவைத்துத்
தடையன்றிப் புகையாமல் சுருக்குத்தாக்கே. ()

இ-ரை லிங்கத்தை யொருகட்டியாக வாங்கி ஒரு பாத்திரத்தில் லிங்க முங்கக்கூடிய தேன்விட்டு ஒருநாள் ஊறினபின் னெடுத்துபின்பு அமுர்தப்பால் லிங்கம் முங்கவிட்டு ஒருநாள் ஊறவைத்து எடுத்து எலுமிச்சம் பழச்சாறும் குப்பைமேனிச்சாறும் அமுர்தப்பாலும் மூன்றுஞ் சமமாய்க்கலந்து வைத்துக்கொண்டு ஒருசட்டியை அடுப்பேத்திக் காயவைத்து அந்தச்சட்டிக்குள் லிங்கத்தைவைத்துப் புகையாமல் கலந்து வைத்த சாறை சுருக்குக் கொடுத்தெடுக்கச் சுத்தியாம்

### இரச சுத்தி.

தாக்குகின்ற சூதத்தை யருக்கன்பாலில்
தானொருநா ளூரவைத்து யெடுத்துக்கொண்டு
நோக்கமுடன் செங்கலது தூளுங்கொஞ்சம்
நுண்ணிதமாய்ப் புகையீரல் தூளுங்கொஞ்சம்
ஆக்கமுடன் மஞ்சளது தூளுங்கொஞ்சம்
அடைவான சர்க்கரைதா னதற்குக்கொஞ்சம்
பாக்கியிலா நாலுடனே ரசத்தைவிட்டுப்
பண்புடனே அரைத்தெடுக்கச் சுத்தியாச்சே (16)

இ-ரை எருக்கம்பால் பிடித்துவந்து சூதத்தை அதற்குள் விட்டு ஒருநாள் ஊறியெடுத்த பின்பு ஷை சூதத்தைக் கல்வத்திவிட்டு செங்கல் தூளும் புகையீரல் தூளும் மஞ்சள் தூளும் சர்க்கரையும் அத்துடன்போட்டு அரைத்தெடுக்கச் சுத்தியாகும்

### மற்றொருவித ரசசுத்தி

சுத்தித்த ரசமதனை யெடுத்துப்பின்பு
சுகமாகக் கல்வத்தி லிட்டுக்கொண்டு
சித்தியுள்ள வெள்ளைப்பூண் டதையுரித்துத்
திறமையுட னதைப்போட்டு அரைத்தெடுக்கப்
பத்தியுள ரசந்தானுஞ் சுத்தியாச்சு
பக்குவமாய்த் தானெடுத்து வைத்துக்கொண்டு
எத்திசையு மறியவே சூதந்தன்னை
இயல்பாகச் சூதச்செந் தூரஞ்செய்யே (17)

இ-ரை முன்சுத்தித்த சூதத்தைக் கல்வத்திலிட்டு அத்துடன் வெள்ளைப் பூண்டை யரித்துப்போட்டு இரண்டுஞ் சேர்த்தரைத்து எடுக்க மிகுந்த சுத்தியாகும் இதைச் செந்தூரஞ் செய்யச் சகல காரியாதிகளுக்கும் உபயோகமாகும்

வெள்ளைப்பாசாண சுத்தி.

செய்யப்பா வெள்ளைபா சாணசுத்தி
திறமாக வாங்கிவந்து வைத்துக்கொண்டு
உய்யவே சிறுவருட அமுரிவாங்கி
உயர்வான மிளகுதனை யரைத்துப்போட்டு
மெய்யான பாசாணங் கிளிதான்கட்டி
விதமான அடுப்பேத்தி எரித்தெடுத்து
பையவே கழுவியதை உலர்த்திக்கொண்டால்
பக்குவமாஞ் சரியான சுத்தியாச்சே. (18)

இ-ரை சுத்தமான வெள்ளைப் பாசாணத்தை வாங்கி வைத்துக் கொண்டு சிறுவருடைய அமுரி ஒருபடி வாங்கி அதில் நல்ல மிளகு கொஞ்சம் அரைத்துப்போட்டுக் கலக்கி வெள்ளைப் பாசாணத்தைக் கிளிக்கட்டி அதிற் போட்டு வத்தக் காய்ச்சியபின் கிளியை யெடுத்துக் கழுவி யுலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்

பாசாணச் சுத்தி.

சரியான பாசாணந் தன்னைவாங்கித்
தான்சுத்தி செய்யுதற்கு முறையைக்கேளு
பெரிதான மேனிச்சார் வெற்றிலைச்சார்
பெரியதொரு செம்பருத்தி பழச்சாரோடு
உரியதொரு சிற்றமுரிக் கற்றுளம்பால்
ஒருபடிதான் வகைக்குவகை தானும்வாங்கி
சிரிதான அமுர்தப்பால் படிகால்வாங்கிச்
சிறப்பாகச் சட்டியிலே விட்டுக்கொள்ளே. (19)

இ-ரை நல்ல பாசாணமாய் வாங்கி வைத்துக்கொண்டு சட்டியில் குப்பைமேனிச்சார் வெற்றிலைச்சார் செம்பருத்திச்சார் எலுமிச்சம் பழச்சார் சோற்றுக் கற்றாழைச்சார் சிற்றமுரி வகைக்கொரு படி வாங்கி அத்துடன் அமுர்தப்பால் படி கால்விட்டுக் கலந்து அப்பால் (மறுபாட்டு பார்க்கவும்.)

### இரச சுத்தி

விட்டபின்பு படிகாரம் பாறையுப்பும்
வெடிகாரம் நவச்சாரம் வகைக்குத்தானும்
சட்டமுடன் பலங்கால்தான் தூள்கள்செய்து
சட்டியிட்டு சரக்கதனைக் கிளிதான்கட்டி
திட்டமுடன் காற்றில்லா நிழலிலேதான்
திறமாமூ வைந்துநாள் வைத்தெடுத்து
கட்டமிலாக் காடியினி லூரவைத்துக்
கருத்தாக யெடுத்துப்பார் சுத்தியாமே. (20)

இ-ரை முன்சொன்ன எழுசாமானுடன் படிகாரம் பாறையுப்பு வெடிக்காரம் நவச்சாரம் இந்த நாலு சரக்கிலும் வகைக்குப் பலங் கால் வாங்கித் தூள்செய்து முன்சொன்ன எழுசாமான் சாற்றிலும் போட்டு கலக்கி பாசாணத்தைக் கிளிக்கட்டி காற்றில்லாத நிழலில் பதினைந்து நாள் வைத்தெடுத்து அப்பால் காடியி லூறவைத்து யெடுக்கச்சுத்தி யாகும்.

### 64 பாசாண சுத்தி

சுத்திசெய் பாசாணமறு பத்தினாலும்
சுகமாக சுத்திக்கு முறைதான்கேளு
சத்தியுள மேனிச்சார் தக்காளிச்சார்
தக்கஊ மத்தஞ்சார் பழச்சாரோடு
புத்தியுடன் சிறுநீறும் புளித்தகாடி
புகழ்சமனுய்க் கலந்ததனை வைத்துக்கொண்டு
சித்தியுடன் வெடியுப்பு உப்புச்சுண்ணம்
சீனம்நவச் சாரமுடன் வகைக்குத்தானே. (21)

இ-ரை பாசாண மென்று சொல்லக்கூடிய அறுபத்துநான்கு பாசாணங்களில் எந்தப்பாசாணஞ் சுத்திசெய்ய வேண்டுமானாலும் அந்தப்பாசாணத்தை வாங்கிக் கொண்டு குப்பைமேனி தக்காளி ஊமத்தை இந்த மூன்றையுஞ் சாறு வாங்கி எலுமிச்சம் பழச்சாறும் சிறுநீரும் புளித்த காடியும் சமனாய்ச் சேர்த்து வைத்துக்கொண்டு வெடியுப்பு உப்புச்சுண்ணம் சீனம் நவச்சாரமும்
(இனிமறுபாட்டைப் பார்க்கவும்.)

ஷை பாசாணச் சுத்தி.

தானென்ற வகைவகைக்குப் பலங்கால்வாங்கித்
தக்கபடி தூள்செய்து சாற்றிற்சேர்த்து
நானென்ற சரக்குகளைக் கிளியாய்க்கட்டி
நலமாமண் டலங்கழித்து எடுத்துத்தானும்
கோனென்ற சரக்குகளை உலர்த்திக்கொள்ளக்
கொடியபா சாணமெல்லாஞ் சுத்தியாச்சு
வேனென்ற யாக்கோபு மகிழ்வதாக
வெளியாகச் சொல்லிவிட்டேன் செய்துபாரே.

இ-ரை வகைக்குப் பலங்கால்வாங்கித் தூள் செய்து மேற்கண்ட சாற்றில் சேர்த்து சுத்திசெய்யவேண்டிய பாசாணத்தைக் கிளியாய்க் கட்டி வைத்து ஒரு மண்டலங் கழித்து எடுத்து சரக்கை உலர்த்தி வைக்க நல்ல சுத்தியாகும்.

முதார் சிங்கிச் சுத்தி.

செய்யுமுதார் சிங்கிசுத்தி சொல்லக்கேளு
திறமாமு தாரசிங்கிக் கட்டிவாங்கி
அய்யமிலா வெள்ளாட்டுக் கோமயத்தில்
அன்புடனே தான்போட்டு வேகவைத்து
பையவே ஆறவிட்டு அதையெடுத்துப்
பக்குவமாய்ச் சுண்ணச்செந் தூரஞ்செய்ய
மெய்யாக யாக்கோபு சொன்னேன்பாரு
மேதினியோர்க் கிதுநல்ல மார்க்கந்தானே.(23)

இ-ரை முதார் சிங்கியை வாங்கி ஒரு சட்டியில் வெள்ளாட்டுக் கோமயம் பிடித்து அதில் முதார் சிங்கியைப் போட்டுச் சட்டியை அடுப்பேற்றி ஒரு நாழிகைவரை கொதிக்கவைத் தெடுத்துக் காய வைக்கச் சுத்தியாகும்.

கெளரி சுத்தி.

மார்க்கமுள்ள கௌரியைத்தான் வாங்கிவந்து
வடிவான சாணிப்பால் பசும்பாலோடு
ஏர்க்கையுள மிளகுக்கி யாழம்வாங்கி
இனிமைச்சுண் ணும்புநீர்இவைநா லிற்குன்
தீர்க்கமுடன் தனித்தனியாய்ச் சட்டியிட்டுச்
செயகௌரி யைத்தானுந் தொளாந்திரங்கட்டி
பார்க்குள்ளே நாலுதரம் எரித்தெடுத்துப்
பன்றிப்பா லிற்போட்டு அவித்துக்கொள்ளே.()

இ-ரை வெள்ளைக் கௌரியாய் வாங்கிவந்து பசும்பால் அல்லது சாணிப்பால்-சுண்ணும்புநீர் - மிளகுக் கியாழம் இன்னுங்கில்-எதிலாவது-சட்டியிலிட்டு மருந்தைத் தொளாந்திரமாகக்கட்டி அடுப்பேற்றி ஒரு நாழிகைவரை யெரித்து யெடுத்து பிறகு பன்றிப்பாலில் கிளிக்கட்டி அவித்தெடுக்கச் சுத்தியாகும்,

மனேசிலை சுத்தி.

போட்டதொரு மனேசிலையை வாங்கிவந்து
புகழான காடிதனைச் சட்டியிட்டு
நாட்டமுடன் மனேசிலையைக் கிளிதான்கட்டி
நன்மையுடன் ருனெடுத்து வைத்துக்கொண்டு
தேட்டமுடன் வெள்ளாட்டு அமுரிதன்னில்
திரமாகத் தொளாந்திரமுங் கட்டியேதான்
தாட்டிகமா யெரித்தெடுக்கச் சுத்தியாச்சு
தான்சொன்னேன் யாகோபு இன்றுதானே (25)

இ-ரை மனேசிலையை நல்லதாய்ப் பார்த்து வாங்கிவந்து ஒரு சட்டியில் புளித்தகாடி விட்டு மனேசிலையைக் கிளிக்கட்டிப் போட்டு யெடுத்து அப்பால் வெள்ளாட்டு அமுரியை ஒரு சட்டியில் விட்டு அதில் மருந்தைத் தொளாந் திரங்கட்டி யெரித்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

கெந்தகச் சுத்தி.

இன்றுமே கெந்திதனை வாங்கிக்கொண்டு
இனிமையுடன் சட்டிக்குள் பாலைவிட்டு
அன்றுமே துணியாலே வேடுகட்டி
அதன்மேலே கெந்திதனைத் தான்பரப்பிச்
சென்றுமே அடுப்பேற்றித் தீயெரிக்கத்
திரமாக உறுகியது பாலில்வீழும்
நன்றுமே யிப்படியேழ் தரமுஞ்செய்ய
நல்லதொரு யாக்கோபு சொன்னேன்நானே (26)

இ-ரை கெந்தகத்தை வாங்கிவைத்துக் கொண்டு ஒரு சட்டிக்குள் பசும்பாலைவிட்டுச் சட்டியின்மேலே துணியால் வேடுகட்டி அந்தத் துணியின் மேலே கெந்தகத்தைப் பரப்பி அதன்மேல் கவுசட்டி போட்டுமூடி புட்டு அவித்தது போல அடுப்பேற்றி அவிக்கக் கெந்தகம் யாவும் உருகிப் பாலில் விழும் இப்படி யேழுதரஞ்செய்ய நல்ல சுத்தியாகும்.

தாளகச் சுத்தி.

நானென்ற தாளகத்தின் சுத்திகேளு
நலமான தாளகத்தின் கட்டிவாங்கித்
தானென்று சுண்ணும்புக் கல்லைவாங்கித்
தான்பரப்பித் தாளகத்தை யதன்மேல்வைத்துக்
கானென்ற சுண்ணும்பை அதன்மேல்போட்டு
கழுதைமூத் திரம்விட்டு சுண்ணம்நீத்து
கோனென்று யிப்படியேழ் தரமேநீத்திக்
கொண்டெடுக்கத் தாளகமுஞ் சுத்தியாச்சே.(27)

இ-ரை நீத்தாத சுண்ணும்புக்கல் கொண்டுவந்து கொஞ்சங்கீழே பரப்பி அதன்மேலே தாளகக்கட்டிகளை வைத்து பின்பும் அதன் மேலே சுண்ணும்புக் கல்லுகளைப் போட்டு நிறப்பி கழுதை அமுரி விட்டு சுண்ணும்பை நீத்தவும் இப்படி யேழுதரம் நீத்தித் தாளகத்தை யெடுத்து நீரிற்கழுவி யெடுக்கச் சுத்தியாகும்.

ஷ டி தாளகச் சுத்தி.

சுத்தித்த தாளகத்தைப் பின்பெடுத்துச்
சுருக்கதுவுங் கொடுப்பதற்கு முறையைக்கேளு
பத்தியுடன் தயிற்பூச ணிக்காய் நீரும்
பாங்கான காடி நீர் சுண்ண நீரும்
புத்தியுடன் கொள்ளுக் கியாழ நீரும்
புரிவகத்திக் கீரைவிரைத் தயிலங்கூட்டி
நத்தியே சாமம்ரெண்டு சுருக்குத்தாக்க
நன்மையுள்ள சுத்தியென்று சொன்னோம்பாரே

இ-ரை முன்பு சுத்திசெய்த தாளகத்தை யெடுத்து வைத்துக் கொண்டு பூசணிப்பழத்தை மேலேகீறி மூன்று விராகனிடை இங் துப்பூ அதற்குள் போட்டு அடியில் சிறு துவாரம் போட்டு உரியில் வைத்துக் கீழே பீங்கான் வைக்கப் பூசணி நீர் இறங்கும் அந்த நீரும் தயிரும் காடியும் சுண்ணநீரும் கொள்ளுக்கியாழமும் இவ்வைந்தும் ஒன்ருக ஒரு சட்டியிலூற்றி அகத்திக்கீரை விரைத்தயிலம் வாங்கி ஒன்றுசேர்த்து இரண்டு சாமம் சுருக்குக் கொடுத்து எடுக்கச் சுத்தி யாகும்.

அயத்தோட்டிப் பாசாண சுத்தி.

பாரே நீ அயத்தொட்டி தன்னைவாங்கிப்
பசும்பாலில் நாற்சாம மூறவைத்து
நேரேதா னதையெடுத்து வைத்துக்கொண்டு
நெய்தேனில் எட்டுநா ளூரப்போட்டு
சீரேதா னதையெடுத்துக் கழுவிக்கொள்ளச்
சிறப்பான அயத்தொட்டி சுத்தியாச்சு
தேரேதா னென்றுசொல்லி யாக்கோப்தானும்
தெளிவாகச் சொன்னதிந்த முறைதான்பாரே.

இ-ரை அயத்தொட்டி சுத்தமானதாக வாங்கி வந்து பசும்பாலை யொரு பாத்திரத்தி லூற்றி அயத்தொட்டியைப் போட்டு நான்கு சாமம் ஊறவைத்தெடுத்துப் பின்பு நெய் தேன் இவை இரண்டிலும் எட்டு நாளூறவிட்டு யெடுக்கச் சுத்தி யாகும்.

தொட்டிப்பாசாணச் சுத்தி.

முறைப்படியே தொட்டிப்பா சாணந்தன்னை
முன்பின்னாய் நறுக்கியே வைத்துக்கொண்டு
நிறைப்படியே துணியிலே கிளிதான்கட்டி
நெல்லுக்குள் வைத்தவித்து யெடுத்துக்கொண்டு
குறையில்லா நெல்லதனைக் குப்பைதன்னில்
கொட்டிவிட்டுக் கிளியவிழ்த்து உலர்த்திவைக்க
மறைபுகழும் யாக்கோபு உரைத்தமார்க்கம்
மகிழ்வாகச் செய்துநீ யெடுத்துக்கொள்ளே. ()

இ-ரை தொட்டிப் பாசாணத்தை வாங்கி அமுதப்பாலில் ஒரு தடவையும் வெள்ளாட்டுப்பாலில் ஒரு தடவையும் பத்து நாழிகை ஊற வைத்தெடுத்து துண்டு துண்டாய் நறுக்கிக் கிளிக்கட்டி நெல்லுக்குள் வைத்து அவித்து யெடுத்துக் கொள்ளச் சுத்தி யாகும் நெல்லைக் குப்பையிற் கொட்டிவிடவும்.

பொன்னிமிளைச் சுத்தி.

எடுத்துமே பொன்னிமிளை தன்னைவாங்கி
இயல்பாகக் காடியினி லூறப்போட்டு
விடுத்தஅபி ரேக்குஒரு படிதூள்தன்னை
மிக்கபசுங் கோமயத்திற் போட்டுயின்னும்
அடுத்ததொரு பொன்னிமிளை தன்னைச்சேர்த்து
அடைவாக வேகவைத் தெடுத்துலர்த்திக்
கடுத்ததொரு காடியினி லூறப்போட்டுக்
காயவைத்து யெடுத்துப்பார் சுத்தியாச்சே.(31)

இ-ரை பொன்னிமிளையை வாங்கி மூன்று நாள் காடியினி லூறப் போட்டெடுத்துப் பின்பு அபிரேக்கு ஒரு படி வாங்கி தூள் செய்து பசுங்கோமயத்திற் போட்டுக் கலக்கி அதில் பொன்னிமிளையைப் போட்டுவேகவைத்தெடுத்துக் காடியி லூறப்போட்டு யெடுத்துக் காய வைத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

கெருடபச்சைச் சுத்தி.

பாரப்பா கெருடபச்சை தன்னைவாங்கிப்
பண்பாக பயறுபோல் நறுக்கிக்கொண்டு
சீரப்பா அதைத்தானுங் கிளியேகட்டிச்
செயமான குமரிச்சார் தன்னைவாங்கி
நேரப்பா குமரியுட சாற்றினுள்ளே
நிறையாக ஒருநாள் நீ ஊறப்போட்டு
சேரப்பா அதையெடுத்துக் காயவைத்தால்
தேடினதோர் பொருளாச்சு சித்தியாச்சே. (32)

இ-ரை கெருட பச்சையை வாங்கிவந்து பயறுபோல் நறுக்கிக் கிளிக்கட்டிவைத்துச் சோற்றுக் கற்றாழைப் பால்வாங்கி அதனுள்ளே கிளிக்கட்டி யிருக்கிற கெருடப் பச்சையைப் போட்டு ஒரு நாளூற வைத்தெடுத்துக் காயவைத்துச் சட்டியில் வைத்துக் கொள்ளச் சுத்தி யாகும்.

சிலாசத்தின் சுத்தி.

சித்தித்த சிலாசத்தை வாங்கிவந்து
சிறப்பாகப் பழரசத்திற் கொதிக்கவைத்து
மத்தித்த பிற்பாடு எருக்கம்பாலில்
மயமாக ஊறினபின் கழுவிப்பின்பு
பத்தியுடன் அல்லிப்பூ ரசத்திற்றானும்
பண்பாக ஊறவைத் தெடுத்துக்கொண்டு
துத்தியமா யாவின்பால் தன்னிலேதான்
தொளாந்திரங் கட்டியெரித் தெடுத்துக்கொள்ளே.

இ-ரை சிலாசத்தை வாங்கி வந்து எலுமிச்சம்பழச் சாற்றிற் போட்டுக் கொதிக்கவைத்துப் பின்பு எருக்கம்பாலில் மூன்றுநாழிகை யூறவைத்தெடுத்துப் பின்பு அல்லிப்பூ ரசத்தில் ஊறவைத்து எடுத்து ஒரு சட்டியில் ஆவின் பால்விட்டுச் சிலாசத்தைத் தொளாந்திரங்கட்டி யெரித்து எடுக்கச் சுத்தியாகும்.

கல்நார் சுத்தி—சீனஞ்சுத்தி.

எரித்துவிட்டுக் கல்நாறை வாங்கிவந்து
இயல்பாகக் கழுதைமூத் திரத்திலேதான்
துரிதமுடன் ஊறவைத் தெடுத்துக்கொண்டு
சுகமாகக் கழுவியதை வைத்துக்கொள்ளு
அரிதான சீனமதின் சுத்திகேளு
அன்பாகச் சீனமதைப் பசும்பால் தன்னிற்
பெரிதாக முச்சாமம் ஊறவைக்கப்
பேணியே நல்லசுத்தி யாச்சுபாரே. (34)

இ-ரை கல்நாறைக் கொண்டுவந்து ஒருசட்டியிட்டு கழுதையமூரி யைவிட்டு மூன்றுநாழிகை ஊறினபின்னெடுத்து வைத்துக்கொள்ளச் சுத்தியாகும். சீனத்தை வாங்கிவந்து பசும்பாலிற்போட்டு மூன்று சாமம் ஊறியபின் யெடுத் துலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும்.

படிக்காரஞ் சுத்தி.

ஆச்சப்பா சட்டியிலே சாணந்தன்னை
அன்பாக வேகரைத்து வைத்துக்கொண்டு
நீச்சப்பா படிக்காரந் தன்னைத்தானும்
நேர்மையுடன் கிளிக்கட்டி வைத்தெடுத்து
பாச்சலுளி சிறுநீரில் மூன்றுநாளும்
பக்குவமா யூறவைத் தெடுத்துப்பின்பு
மாச்சலிலா மற்காய வைத்தெடுத்து
வகையோடு மருந்துகளிற் சேர்த்துப்பாரே. ()

இ-ரை படிக்காரத்தை வாங்கிவந்து ஒருசட்டியிலே எருமைச்சாணத்தைக் கரைத்துவைத்துப் படிக்காரத்தைக் கிளிக்கட்டி வைத்தெடுத்துப் பின்பு சிறு நீரில் மூன்றுநா ளூறவைத் தெடுத்துக் காய வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

வெண்காரச் சுத்தி-முடிதாரச் சுத்தி.

சேர்த்ததொரு வெண்காரச் சுத்திகேளு
திறமையுடன் பழரசத்தி லரைத்துக்கொண்டு
நேர்த்தியுடன் வில்லைதட்டி உலர்த்திக்கொண்டால்
நேரான சுத்தியீ தாகும்பாரு
ஆர்த்தியுடன் முடிதாரந் தன்னைவாங்கி
அன்பான பனங்கள்ளு படிதான் நாலிற்
சீர்த்தியுடன் கிளிக்கட்டி எரித்தெடுக்கச்
சிறப்பான சுத்தியிது தெரிந்துகொள்ளே. (36)

இ-ரை வெண்காரத்தை வாங்கிவந்து குழியம்மியிலிட்டு காடியினிலாவது எலுமிச்சம்பழச் சாற்றிலாவது அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துக் கொள்ளவும்.

முடிதாரத்தை வாங்கிவந்து நாலுபடி பனங்கள்ளு சட்டியிட்டு முடிதாரத்தைக் கிளிக்கட்டி யதிற்போட்டு அடுப்பேற்றி எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

பால்துத்தஞ் சுத்தி

கொள்ளப்பா பாலதுத்தங் கிளிதான்கட்டிக்
குணமான சிறுநீரிற் குள்ளேபோட்டுக்
கள்ளமில்லா மல்லொழுங்கா யேழுநாளுங்
கணக்காக ஊறியபின் னெடுத்துக்கொண்டு
மெள்ளவே பசும்பாலி லிரண்டுசாமம்
மெதுவாக ஊறவைத்து யெடுத்துப்பின்பு
உள்ளபடி உலரவைத்து மருந்துசெய்ய
உண்மையுடன் யாக்கோபு சொன்னார்பாரே. (37)

இ-ரை பால்த்துத்தத்தை வாங்கிக் கிளிக்கட்டி சிறுநீரிற் போட்டு ஏழுநாளூறவைத் தெடுத்துப் பசும்பாலி லிரண்டு சாமம் ஊறவைத்து பின்பு உலர்த்தி வைக்கச் சுத்தியாகும்.

துருசுச் சுத்தி.

சொல்லுகிற துருசுதனை வாங்கிவந்து
சுகமுடனே தயிரதனி லூறப்போட்டு
நல்லதொரு தயிரினாற் பின்பரைத்து
நன்றாக வில்லைதட்டி யெடுத்துக்கொண்டு
செல்லமுள்ள ஓடதனை அடுப்பிலேற்றித்
திரமாகப் புரட்டியதை எடுத்துக்கொண்டால்
இல்லமதி விதைப்போலச் சுத்திவேறு
இல்லையென்று யாக்கோபு யியம்பினாரே. (38)

இ-ரை துருசைவாங்கித் தயிரிலூறப் போட்டு எடுத்துக் கொஞ்சந் தயிர்விட்டரைத்து வில்லைதட்டி வைத்துக் கொண்டு ஓட்டை அடுப்பிலேற்றி அந்த ஓட்டில் துருசுவில்லையைப் போட்டுப் புரட்டி எடுத்து வைக்கச் சுத்தியாகும்.

பச்சைத்துருசுச் சுத்தி—மடல்துத்தஞ் சுத்தி.

இயம்பினபச் சைத்துருசை வாங்கிவந்து
இயல்பாகப் பசுங்கோம யத்திற்போட்டு
நயம்படவே யெரித்தெடுக்கச் சுத்தியாச்சு
நல்லதொரு மடல்துத்தஞ் சுத்திகேளு
பயன்படவே சோற்றுக்கற் றாழைச்சாற்றிற்
பண்பாக ஊறவைத் தெடுத்துக்கொண்டு
செயம்பெறவே தான்கழுவி யுலர்த்திவைத்தாற்
செகமெல்லா மாடலாந் திறமைதானே. (39)

இ-ரை பச்சைத்துருசை வாங்கிப் பசுங்கோமயத்தில் போட்டு அடுப்பேற்றி யெரித் தெடுக்கச் சுத்தியாகும்.

மடல்துத்தத்தை வாங்கி எருமைத் தயிரிலாவது அல்லது கற்றாழஞ் சாற்றிலாவது கிளிக்கட்டி ஊறவைத் தெடுக்கச் சுத்தியாகும்.

பவளப்புத்து சுத்தி—அஞ்சனக்கல் சுத்தி.

திரமுள்ள பவளப்புத்தைப் பசுமோர்தன்னிற்
செவ்வையாய்க் கிளிக்கட்டி அதிலேவைத்து
வரமுடனே நாலுநா ழிகையெரித்து
வகையாகத் தாமெடுக்கச் சுத்தியாச்சு
நிரமுடனே அஞ்சனக்கல் வாங்கிவந்து
நிலையான புளியாரைச் சாறுதன்னிற்
தாமுடனே நீபோட்டு ஊறவைத்துத்
தானெடுத்துக் கழுவிவைக்கச் சுத்தியாச்சே. (40)

இ-ரை பவளப்புத்து வாங்கிக் கிளிக்கட்டிப் பசுமோரிற்போட்டு அடுப்பேற்றி நாலுநாழிகை எரித்தெடுக்கச் சுத்தியாகும்

அஞ்சனக்கல் கொண்டுவந்து புளியாரைச் சாற்றில் ஒருநாள் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாகும்.

கல்மதஞ்சுத்தி—சகஸ்திரபேதி சுத்தி.

ஆச்சேதான் கல்மதத்தை வாங்கிவந்து
அன்பாகச் சிறுநீரி லூறப்போட்டுத்
தாச்சலிலா ததையெடுத்துக் கழுவச்சுத்தி
சகஸ்திரபே தியின்சுத்தி தன்மைகேளு
மாச்சலிலா நார்த்தங்காய் ரசத்தைவாங்கி
மயமாக அதிற்தானும் ஊறவைத்துப்
பேச்சில்லா தேயெடுக்கச் சுத்தியாச்சு
பெலமாக விருப்பமுடன் செய்துபாரே. (41)

இ-ரை கல்மதத்தைக் கொண்டுவந்து சிறுநீரிற் போட்டு ஊறவைத்தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும். சகஸ்திரபேதியை வாங்கி வந்து நார்த்தங்காய் ரசமெடுத்து அதில் ஊறவைத்து யெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

வங்கச் சுத்தி.

விருப்பமுடன் வங்கசுத்தி சொல்லக்கேளு
மேலான நவச்சாரத் தூள்கள் செய்து
மருவில்லா யிலுப்பைநெய் தேங்காய்நெய்யில்
வடிவான நவச்சாரத் தூளைத்தூவி
திருவாக ஏழுதரம் வங்கந்தன்னைத்
திறமாக உருக்கியேழு தரமுஞ்சாய்த்துத்
தருவான வங்கத்தை யெடுத்துப்பார்க்கச்
சரியான சுத்தியா யிருக்கும்பாரே. (42)

இ-ரை வங்கத்தை வாங்கி வைத்துக்கொண்டு இலுப்பைநெய்யி லாகிலும் தேங்காய் நெய்யிலாகிலும் நவச்சாரத் தூளைத்தூவி ஏழுதரம் அதில் உருக்கிச் சாய்த் தெடுக்கச் சுத்தியாகும்.

கருவங்கச்சுத்தி.

பாரே நீ கருவங்கந் தன்னைவாங்கிப்
பண்புடனே வெள்ளாட்டு அமுரிதன்னில்
நேரேதான் பிரண்டைவேர் அரைத்துப்போட்டு
நேர்மையுடன் நல்லெண்ணெய் தன்னைவிட்டுச்
சீரேதான் மூன்றையுமே கலக்கிக்கொண்டு
சிறப்பாயீ ரைந்துதரங் கருவங்கத்தை
வேறேதான் காய்ச்சியே யுருக்கிச்சாய்க்க
மெத்தநல்ல சுத்தியாம் மிகவும்பாரே. (43)

இ-ரை கருவங்கத்தை வெள்ளாட்டு அமுரியில் பிரண்டைவேர் அரைத்துப்போட்டு நல்லெண்ணெய் விட்டுக் கலக்கிவைத்து கருவங் கத்தைப் பத்துத்தரம் உருக்கிச் சாய்த் தெடுக்கச் சுத்தியாகும்.

### நாக சுத்தி.

மிகவுமே நாகசுத்தி சொல்லக்கேளு
மேலான ஆட்டுநெய் யுடனேதானும்
திகழான சாரங்கற் சுண்ணமிட்டுச்
சிறுநீரும் பழச்சாறுஞ் சேர்த்துக்கொண்டு
நிகராகப் பத்துதரம் நாகந்தன்னை
நேர்மையுடன் ருனுருக்கிச் சாய்த்தெடுக்கச்
சுகமான சுத்தியா மிதுதான்பாரு
சுந்தரம்போல் யாகோபுச் சொன்னசீரே. (44)

இ-ரை நாகத்தை வாங்கிவந்து ஆட்டுநெய்யும் சாரமும் கற்சுண்ணமுஞ் சிறுநீரும் பழச்சாறும் இவை ஐந்தும் ஒன்ருகக் கலக்கி வைத்துக்கொண்டு நாகத்தைப் பத்துத்தரம் உருக்கிச் சாய்த்தெடுக்கச் சுத்தியாகும்.

### இரும்பு சுத்தி.

சொன்னதொரு இரும்புதனைப் பொடிதான்செய்து
சுகமாகப் பழரசத்தில் ஊறவைத்து
நன்னயமாய்த் தானெடுத்து எள்ளெண்ணெய்யில்
நலமாக மூன்றுநாள் ஊறவைத்து
முன்னமுள்ள அயச்சட்டி தன்னிற்போட்டு
மூக்கியமாய்க் காடிதனிற் கழுவியேதான்
இன்னமும் வேலம்பட்டைக் கியாழந்தன்னில்
இதமாக வேகவைத் தெடுத்துக்கொள்ளே. (45)

இ-ரை நல்ல யிரும்பை வாங்கி அரத்தால் ராவிப் பொடிசெய்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து எடுத்து நல்லெண்ணெயில் மூன்றுநா ளூறவைத் தெடுத்து இரும்புச் சட்டியை அடுப்பில் வைத்து அரபொடித் தூளைக் கொட்டி நன்ருய் வறுத்துக் காடியிற் கழுவி வேலம் பட்டைக் கியாழத்திற் போட்டு வேக வைத்து யெடுக்கச் சுத்தியாகும்.

### காந்த சுத்தி.

எடுத்துமே காந்தத்தின் சுத்திகேளு
இதமான எலுமிச்சம் பழரசத்தில்
அடுத்துமே காடியிலும் மோரிலுந்தான்
அன்பாக மூன்றுதரங் கொதிக்கவைத்து
விடுத்துமே எடுத்துப்பின் சாணிநீரில்
வேகவைத்து ஏழுதரங் காய்ச்சிக்காய்ச்சித்
தொடுத்துமே எடுத்தாக்கால் சுத்தியாச்சு
சுகமாயா கோபுசொன்ன பாகமாமே. (46)

இ-ரை காந்தத்தைக் கொண்டுவந்து எலுமிச்சம்பழச் சாற்றிலும் காடியிலும் மோரிலும் தனித்தனியாகக் கொதிக்கவைத் தெடுத்தபின் சாணிநீரில் ஏழுதரங்காய்ச்சி எடுத்துக் கழுவிக் காயவைத் தெடுக்கச் சுத்தியாகும்.

### நாபிக்கிழங்கின் சுத்தி.

ஆமேதான் நாபியுட கிழங்குவாங்கி
அதைப்பருத்தி யிலைச்சாற்றி லூறப்போட்டு
நாமேதான் முத்திலைக்குள் ளதனைவைத்து
நலமான குப்பிக்குள் ளேசெலுத்தித்
தோமேதான் சீந்திக்கி யாழந்தன்னிற்
தொளாந்திரமாய்க் கட்டியே வேகவைத்து
தாமேதா னதையெடுத்து எருக்கம்பாலில்
தாலூறிக் கோமயத்திற் கழுவிப்போடே. (47)

இ-ரை நாபிக்கிழங்கைக் கொண்டுவந்து பருத்தியிலைச் சாற்றி லூறப்போட் டெடுத்து ஆமணக்குமுத் திலைக்குள் வைத்துச் சுற்றிக் குப்பிக்குள் வைத்துக்கொண்டு சீந்தியைக் கியாழம் வைத்து அதில் கிழங்கின் குப்பியைத் தொளாந்திரங் கட்டி வேகவைத்து எடுத்து எருக்கன்பாலி லூறவைத்துக் கோமயத்தாற் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

தாமிர சுத்தி.

போடவே தாமிரத்தின் சுத்திகேளு
புத்தியுடன் தாளகமுஞ் சாரம்வாங்கிக்
கூடவே பழச்சாறும் அமுரிவாங்கிக்
கூராக நான்கையுமொன் றாகச்சேர்த்துத்
தேடவே தாமிரத்தை யதனிற் போட்டுத்
திறமாகப் பத்துநாள் வெயிலில் வைத்து
நாடவே அதையெடுத்துக் கழுவிப்போட்டு
நன்றாகச் சுண்ணச்செந் தூரஞ்செய்யே. (48)

இ-ள் தாமிரத்தைத் தகடடித்துத் தாளகமுஞ் சாரமும் பழச் சாறும் அமுரியும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்கித் தாமிரத்தகட்டை அதிற் போட்டுப் பத்துநாள் வெயிலில் வைத்து எடுத்துக் கழுவிப் பார்க்கச் சுத்தியாகும்.

குதிரைப்பல் பாசாணச் சுத்தி.

செய்யவே குதிரைப்பற் பாசாணத்தைச்
சிறப்புடனே சுத்திசெய்ய முறைதான்கேளு
மெய்யதாய் உமிழ்நீரை வாங்கிவந்து
மிகவுமே அந்நீரி லூறப்போட்டு
ஐயமிலா ததையெடுத்துக் கழுவிவிட்டு
அன்புடனே வெயில்தனிலே காயவைத்துப்
பையவே எடுத்துப்பார் சுத்தியாச்சு
பக்குவமா யெடுத்துநீ பதனம்பண்ணே. (49)

இ-ள் குதிரைப்பற் பாசாணத்தைக் கொண்டுவந்து உமிழ் நீர்வாங்கி அதிலூறப்போட்டுச் சுத்தமான தண்ணீர் விட்டுக்கழுவி வெயிலிற் காயவைத்து எடுக்கச் சுத்தியாகும்.

குக்கில்சுத்தி குந்தரிக்கஞ் சுத்தி.

பதமான குக்கிலது வாங்கிவந்து
பக்குவமாய் எருமையுட மோருதன்னிற்
சதமாக ஊறவைத் தெடுத்துப்பாரு
சரியான சுத்தியதா யிருக்குமப்பா
விதமான குந்தரிக்கங் கொண்டுவந்து
வேலம்பட்டைச் சாராயந் தன்னிற்போட்டு
நிதமாக ஒருநாள்தா னூறவைத்து
நேர்த்தியுடன் ருனெடுத்து மார்க்கங்கேளே (50)

இ-ரை குக்கில்வாங்கி வந்து எருமைமோரி லூறவைத் தெடுக்கச் சுத்தியாகும். குந்தரிக்கம் வாங்கி வந்து வேலாம் பட்டைச் சாராயத் திற்போட்டு ஒருநா ளூறவைத் தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

நேர்வாள சுத்தி.

மார்க்கமுள்ள நேர்வாளந் தன்னைவாங்கி
வகையாக எருமைச்சா ணத்திற்போட்டு
ஏர்க்கையுடன் காடிவிட்டுக் கரைத்துக்கொண்டு
இதமாகக் கொதிக்கவைத்து நஞ்சுநீக்கிப்
பார்க்கவே பருப்புடைத்து மூளையைப்போக்கிப்
பண்புடனே காடிமோர் பழரசத்தில்
தீர்க்கமுடன் கொதிக்கவைத்து யெடுத்துக்கொள்ளத்
திரமாகப் பேசினேன் யாக்கோபு தானே. (51)

இ-ரை நேர்வாளத்தைக் கொண்டு வந்து எருமைச் சாணத்திற் காடிவிட்டுக் கரைத்து அதிற்போட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைத் தெடுத்துப் பருப்புடைத்து மூளையைப் போக்கி எடுத்துக் காடி மோர் பழச்சா ரிம்மூன்றையுஞ் சேர்த்து அதிற்போட்டுக் கொதிக்க வைத்து எடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

சேங்கோட்டை சுத்தி.

பேசியே சேங்கொட்டை தன்னைவாங்கிப்
பிசகாம லதன்மூக்கை வெட்டிவிட்டு
வாசியுடன் சாணிப்பால் தனைக்கரைத்து
வகையாகச் சேங்கொட்டை தன்னைப்போட்டு
நேசமுடன் அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து
நேர்மையுடன் றுன்கழுவி எடுத்துக்கொண்டு
வாசமுட னிப்படியேழ் தரமேகாய்ச்ச
வழுவில்லாச் சுத்தியிது செப்பினேனே. (52)

இ-ரை சேங்கொட்டையைக் கொண்டுவந்து அதன்மூக்கை வெட்டிவிட்டு சாணிப்பாலைக் கரைத்து அதனுள் போட்டு அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து எடுக்கவும் இப்படியே ஏழுதரங் கொதிக்கவைத்தெடுத்துக் கழுவி வைக்கச் சுத்தியாகும்.

எட்டிக்கோட்டை சுத்தி.

செப்பினஎட் டிக்கொட்டை தன்னைவாங்கித்
திறமாக நெல்லில்வைத் தவித்தெடுத்துத்
தப்பிதமில் லாமல்சிறு கீரைச்சாற்றில்
தானூற வைத்தெடுத்துப் பின்புதானும்
ஒப்பியதேற் றுவிரையின் சாற்றிலேதான்
உரிமையுடன் வேகவைத் தெடுத்துக்கொண்டு
எப்பவுமே உபயோகஞ் செய்துகொள்ள
இதமாக யாக்கோபு சொன்னவாறே. (53)

இ-ரை எட்டிக்கொட்டையைக் கொண்டுவந்து நெல்லில்வைத் தவித்தெடுத்துப். பின்பு சிறுகீரைச் சாற்றிற் போட் டூறவைத்தெடுத்துப் பின்பு தேற்றுவிரைச் சாற்றில் வேகவைத் தெடுக்கச் சுத்தியாகும்.

ஊமத்தை விரைச் சுத்தி—அமுக்கிராக் கிழங்கு சுத்தி.

சொன்னவூ மத்தைவிரை தன்னைவாங்கிச்
சுகமாக செலத்திலொரு சாமந்தானும்
நன்னயமா யூறவைக்கச் சுத்தியாச்சு
நல்லமுக்கி ராக்கிழங்கின் சுத்திகேளு
தன்மையாய்க் கிழங்கதனை ஆவின்பாலில்
தானவித்து எடுத்ததனைக் காயவைத்துச்
சின்னமிலா தேபெரிதாய் யெடுத்துவைக்கத்
தேடியே யாக்கோபு திரஞ்சொன்னேனே. (54)

இ-ரை ஊமத்தை விரை யெடுத்துத் தண்ணீரில் ஒரு சாமம் ஊறப் போட் டெடுக்கச் சுத்தியாகும், அமுக்கிராக் கிழங்கைக் கொண்டுவந்து ஆவின்பாலில் போட்டு அவித்தெடுத்துக் காயவைத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

சிவதை சுத்தி—அமுக்கிரா சுத்தி—சுக்குசுத்தி.

திறமான சிவதைதனைப் பசும்பால்தன்னில்
தீரமுடன் அவித்தெடுக்கச் சுத்தியாகும்
உறமான அமுக்குரா இதுபோற்செய்ய
உற்றசுத்தி யாகிவிடும் சுக்குதன்னை
திறமாக மேற்றோடு போக்கிவிட்டு
நேர்மையுடன் சுண்ணும்பு தடவித்தானும்
தறமாகக் காயவைத்து யெடுத்துக்கொள்ளச்
சாற்றினர் யாக்கோபு தன்மைதானே. (55)

இ-ரை சிவதையைக் கொண்டு வந்து பசும்பாலில் அவித்தெடுக்கச் சுத்தியாகும்.

அமுக்கிராவைப் பசும்பாலில் அவித் தெடுக்கச் சுத்தியாகும். சுக்கை மேற்தோலைப் போக்கிவிட்டுச் சுண்ணும்பைத் தடவிக் காயவைத் தெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

மிளகுசுத்தி—திப்பிலிசுத்தி—எள்ளெண்ணெய் சுத்தி.

தன்மையுள்ள மிளகுதனைப் புளித்தமோரில்
தானதையு மூன்றுநா ளூறவைத்து
நன்மைபெற அம்மிளகை யோட்டிற்போட்டு
நலமாக வறுத்தெடுத்து வைத்துக்கொள்ளு
உண்மையுள்ள திப்பிலியைப் பழாசத்தில்
ஊறிவிட்ட பின்பெடுக்கச் சுத்தியாச்சு
வண்மையிலா யெள்ளெண்ணெய் சலத்தில்விட்டு
வகையுடனே யெடுத்துவைக்கச் சுத்தியாச்சே. ()

இ-ரை மிளகைப் புளித்த மோரிற் மூன்றுநாள் ஊறவைத் தெடுத்து அம்மிளகை ஓட்டிற்போட்டு வறுத்தெடுத்து வைத்துக் கொள்ளச்சுத்தியாகும். திப்பிலியை பழச்சாற்றில் ஊறவைத்தெடுத்து கழுவிவைத்துக் கொள்ளச் சுத்தியாகும். நல்லெண்ணெய்யைப் குளிர்ந்த தண்ணீரில் விட்டுப் பிசைந்து கழுவி யெண்ணெய்யை வேருக யெடுத்துக் காயவைத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

ஓமம்—சீரகம்—கோம்பரக்குச்—சுத்தி.

ஆச்சென்ற சுண்ணும்பு நீரிலோமம்
அருமையுடன் ஒருசாமம் ஊறவைத்து
வாச்சுதென் றேயெடுக்கச் சுத்தியாச்சு
மகத்தான சீரகத்தின் சுத்திகேளு
நீச்சென்ற ஓமம்போற் சுத்திசெய்வாய்
நிலையான கொம்பரக்குச் சுத்திகேளு
பாச்சென்ற சலத்திலே அரக்கைப்போட்டுப்
பரிவுடனே எரித்தெடுக்கச் சுத்திதானே. (57)

இ-ரை ஓமத்தைச் சுண்ணும்பு நீரில் ஒரு சாமம் ஊறவைத்து யெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும். சீரகத்தைச் சுண்ணும்பு நீரில் ஒரு சாமம் ஊறவைத்து யெடுத்துக் காயவைத்துக் கொள்ளச் சுத்தியாகும். கொம்பரக்கை வாங்கித் தண்ணீரிற் போட்டு அடுப்பேற்றி எரித்தெடுத் துக் கொள்ளச் சுத்தியாகும்.

பவளத்துத்தி சுத்தி.

தானென்ற பவளத்துத்தி கொண்டுவந்து
சரியான பசுமோரைச் சட்டியிட்டு
வானென்ற பவளத்துத்தி கிளியாய்க்கட்டி
மகிழ்வாகக் கடிகைமூன்று வைத்தெடுத்து
ஏனென்ற அதையுலர்த்தி யெடுத்துக்கொள்ளு
இனிமையுடன் நல்லசுத்தி யிதுவேயாகும்
கோனென்ற யாக்கோபு சொன்னநீதி
குறிப்பான நாடியுட விபரங்கேளே (58)

இ-ரை பவளத்துத்தியைக் கொண்டுவந்து பசுமோரைவிட்டு ஷை பவளத் துத்தியைக் கிளிக்கட்டி அதனுட்போட்டு மூன்று கடிகை வைத்தெடுத்து உலர்த்தி யெடுத்துக் கொள்ளச் சுத்தியாகும்.

நாடிவிபரம் வேறு சந்தம்.

நாடிபி றந்திடும் வகைசொல்வேன்
நம்மள் சடத்து ளறிந்துபாரு
பாடிய யீரலுந் தொப்புள் சார்பும்
பல்லைச் சுத்திடும் விசுமலுடன்
கூடிய பித்து வகையஞ்சுக்குங்
கொடிபோ லோடிடும் நரம்புபத்தும்
ஓடிய நரம்பு பன்னிரெண்டும்
ஒன்றாய்த் திரண்டுதான் பத்தாச்சே. (59)

பத்து நரம்பும் பிரியும்ரெண்டாய்ப்
பாரு கழுத்தின்கீழ் மார்மேலின்
சுத்து நரம்பஞ்சும் முறுக்கிணப்போல்
சுழன்று காம்ரெண்டில் வந்துநிற்கும்
கொத்து முறுக்கான நரம்பஞ்சுங்
கூழையு நீளமு மாகநிற்கும்
தொத்துங் குலையீரல் வாதநாடி
தொப்புள் பித்திற் பித்தநாடியே. (60)

தொப்புட் சார்பினில் சிலேற்பனமாய்த்
துதிக்கும் விசுமனி லையநாடி
தப்பித மில்லையே பல்லுக் குத்தித்
தன்னி லெழும்பிடும் பூதநாடி
செப்பிடு நல்ல முழங்கைக்கிடஞ்
சேர விலகியே புறங்கையோடி
தப்பித மாக மணிக்கட்டில்
தாவிப் பின்புறந் துடித்துநிற்கும். (61)

நிற்கும் வாதமும் பித்தநாடி
நிறைந்த சிலேற்பனம் ஐயநாடி
பக்குவத் துடனே நாலுபிரிவாய்ப்
பணிந்து முறுக்கியே முன்கைவந்து
தக்குல முள்ளதோர் வாதநாடி
தானே மணிக்கட்டு நெற்கடைதான்
சிக்கும் பித்தமும் அதற்குமுன்னே
சிலேற்பனம் பித்தந் தனக்குப்பின்னே. (62)

பின்னே அதற்கப்பா லையநாடி
பிரண்டு பதுங்கிடு முசும்பிடாது
சொன்ன நாடியு மங்கங்கே
துளிரு முன்பின்னாய் நின்றுபோகும்
முன்னும் பின்னாய் நரம்புநாலும்
முறுக்கு விலகியே துளிர்ந்துநிற்கும்
அன்னே நீரு அடியிலூற
அப்போ நரம்புக ளாடிடுமே. (63)

ஆடு மணிகட்டு நெற் கடைதான்
அசையும் வாத்தது நரம்புவந்து
ஓடு மதுக்கப்பால் நெற்கடைதான்
உயர்ந்த பித்தமும் ஆடி நிற்கும்
சாடுஞ் சிலேற்பனம் பித்தத்துக்குத்
தடிக்க ஒருநெல்லுக் கப்பாலே
பாடும் ஐயமதுக் கப்பாலே
பருநெல்லுக் கடைபடுத் திருக்குமப்பா. (64)

அப்படி நாடி பிடித்துப்பார்க்க
அரிய பெருவிரல் பூதமாகும்
ஒப்படி யாக முதல்விரலும்
ஓடும் நாடிதான் வாதமாச்சு
தப்படி யில்லா மறுவிரலும்
சார்ந்து ஓடிஞற் பித்தமாச்சு
இப்படி மூன்று விரலுமோடில்
இசைந்த சிலேற்பன மாச்சுதென்றே. (65)

ஆச்சு சிறுவிர லையமென்று
அறிந்து பாருங்கள் தாதுமுறை
சாச்சுக் கைமுறை விரல்நாலுஞ்
சரியாய் நால்கடை விரித்துப்பிடி
பாச்சும் புஷ்டியாய்த் தாதிருந்தாற்
பாதி நெற்கடை யழுத்திப்பாரு
ஏச்சு மெல்லின மானதாது
இருத்தி நெற்கடை யழுத்திப்பாரே. (66)

பாரே மணிகட்டுக் கப்புரந்தான்
பதிவாய் நெற்கடை தள்ளியே நீ
சேரே உடம்பினிற் சிரசுமுதற்
சிறந்த உடல்கரம் பாதமட்டும்
நீரே விலக்கிய நரம்பெல்லாம்
நிகழ்த்தி வரும்நாடி பத்தாகும்
ஆரே அருவிபோல் வியாதிகளும்
அடுத்து வரும்வகை யோதுவனே. (67)

ஓது முதல்விரல் வாதத்தாலே
ஒடுங்கும் நோயென்று அறிந்துகொள்ளு
பேத மில்லாமல் மறுவிரலும்
பித்தத்தா லென்று பேசிவிடு
சேத மில்லாமல் மூவிரலாற்
சிலேற்பனத் துள்ள நோய்களென்றும்
வீதப் படியின்ன தாலேவந்த
வியாதி யிதுவென் றறிந்துசொல்லே. (68)

அறிந்து குதித்திடும் நாடிமூன்றும்
அப்பவே சன்னி யென்றுசொல்லு
சொரிந்து மூன்றும் பதுங்கியோட
தோஷ குணமென்று சொல்லிவிடு
சரிந்து யெழும்பியே பதுங்குமாகில்
சன்னி தோஷமென் றறிந்துகொள்ளு
விரிந்து அய்யமே யெழுந்துதென்றால்
விளம்புஞ் சாத்தியந் தப்பாதே. (69)

மரணக்குறி.

தப்பும் பித்தஞ் சுழித்தோடில்
தானே சிரமூளை பாய்ந்துதென்றால்
இப்போ மூன்று சாமத்துள்ளே
எடுத்துப் போடுமென் றறிந்துசொல்லு
அப்போ பித்தம் வயற்றி லோடி
அமுக்கிக் குலையிற் பாய்ந்துதென்றால்
ஒப்பும் நாலு சாமத்துள்ளே
உயிரு மரணமென் றறிந்துகொள்ளே. (70)

சாத்தியம் அசாத்தியம்.

கொள்ளும் நாடியிற் சாத்தியங்கள்
கூடி விடுமே யாமாகில்
விள்ளும் வாதமே அம்புபோல
விசையா யுதைந்து யிருந்தாலும்
எள்ளும் பித்தம் போய்விடினும்
எழுந்து ஐயமே ஆடிடினும்
தள்ளு மிதுவெலாஞ் சாத்தியங்கள்
தப்பா தொருநாளும் நீபாரே. (71)

பாரும் பெருநாடி மூன்றுமோடிப்
பண்பு நிலைதப்பிப் பின்னிக்கொண்டால்
ஆரு மதினுட நிலைவிபரம்
அறிவா லறியவே சொல்லுகிறேன்
பேரு மெவ்வித நடந்தாலும்
பெலமாந் தாதுவின் நிலைமைகேளு
கூரும் வாதமு முன்னுதையும்
கொடிய பித்தமே லெழும்பிடுமே. (72)

எழும்புஞ் சிலேற்பனங் கீழேகுத்தும்
இதுவு மறிந்துபார் தலைமாறி
தழும்பித் தழுமில் லாதொழிந்து
தா துபின் வெட்டும் நிலைமைகேளு
வழும்பில் லாமலே மூன்றுவிரல்
வாதம் விழுந்தோடிப் படர்ந்துநிற்கும்
கழும்பில் லாமலே மூவிரலும்
கவிந்து துடிகொண்டால் வெட்டிடுமே. (73)

வெட்டும் வகையிது சாத்தியங்கள்
விபரம் வியாதி தெரியச்சொல்வேன்
கட்டும் வியாதி யின்னதெனக்
கைபிடி தாது உரைக்கலாச்சு
அட்டும் உன்மன மெழுகாச்சு
அழுத்தி மனதிற் குறித்துப்பாரு
தட்டுப் படுமே வியாதியெல்லாம்
சமத்தா யறிந்து முறைதெரியே. (74)

வேறு சந்தம்.

முறையிது மார்க்கமென்று மொழிந்திடும் வகைகட் கெல்லாம்
நறையும்நா லாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு
குறைவிலா தறியவென்ற கொள்கையை விபரமாகத்
தரையினி லுரைப்பேன் நாடி சமர்த்தினுல் வாதம்பாரே. (75)

வாதநாடியின் குணம்.

வாதமே குதிரைபோல் வருகிடில் வயிற்றில் நோவு
பேதமாய்க் கால்கடுக்கும் பிடரியில் வலியுண்டாகும்
மீதமா யிடுப்பு வெட்டும் மேல்வலி யதிகமாகுங்
கோதிலா விழியில் நோவு குதித்தோடும் வாதவாய்வே. (76)

குதித்திடும் வாதம் நாய்போற் கூடிடில் வாதசூலை
கதித்திடு மப்பாலேதான் கடுப்பொடு வலியுண்டாகும்
சதித்திடுங் கரணைகட்டுந் தலையினில் வலியுண்டாகும்
பதித்திடும் வாதசூலை படுத்திடும் ஆமைதானே. (77)

ஆமைபோல் வாதம்வந்தால் அனைத்துமே வெளுப்புண்டாகும்
ஊமைபோ லரிப்புண்டாகும் உச்சியுந் தடித்துக்காணுஞ்
சாமைபோல் முகப்பருவு சாடிடும் சதியுங்காணும்
வாமைபோல் வாதவேகம் வந்திடும் வகையதாமே. (78)

எலியைப்போல் வாதம்வந்தால் எண்ணிய சிங்குவாய்வு
பெலிதமாய் வயிறுநோகும் பின்னையும் பொருமல்காணும்
பலிதமாய் மலமுங்கட்டும் பளிச்சென்று குத்தும்மேலிற்
சலிதிமே லசதியுங் காணுந் தானிது சிங்குவாய்வே. (79)

பூனைபோல் வாதம்வந்தால் பொருந்திய அட்டகுன்மஞ்
சேனைபோல் வயிர்வலிக்கும் செனத்தினிற் குடல்வலிக்கும்
ஆனைபோல் வீரங்குன்றும் அசதியுங் களைப்புண்டாகும்
வானைபோ லட்டகுன்மம் வந்திடும் வகையதாமே. (80)

உடும்புபோல் வாதம்வந்தால் ஓதிய வயிர்வலிக்கும்
கடுக்குமே கைகால் நெற்றி கழுத்தொடு இடுப்புச்சந்து
விடுத்திடுங் குரலுமங்கும் விரைந்திடும் அசதிசோபந்
தொடுவிழி கம்மும் வாத சூலையின் வாயுவாமே. (81)

அன்னம்போல் வாதம்வந்தால் அசதியுஞ் சோபமுண்டு
சொன்னதோர் வயிர்பொருமுஞ் சுழித்திடும் வலியிடுப்பிற்
கண்ணது யெரிவுண்டாகும் காலுகை யசதியுண்டு
மின்னல்போற் கண்ணிற்றோணும் மேகத்தின் சூலைதானே. (82)

காகம்போல் வாதம்வந்தால் கால்களும் வீக்கமுண்டு
வேகமாய்க் கடுக்குங் குத்தும் விழிரெண்டுங் கம்மலாகும்
தாகமுஞ் சோபமுண்டு சந்தட னிடுப்புநோகும்
பாகமாம் வாதமென்று பார்த்துநீ யறிவாய்தானே. (83)

தவளைபோல் வாதம்வந்தால் சந்துகள் கடுப்புண்டாகும்
துவள்வே காலுங்கையும் துடுக்கென அசதியுண்டு
கவளவே வயிறுநோகுங் கண்ணுநெஞ் செரிவுகாணும்
இவளவில் விந்துடைந்து இருப்பது சூலையாமே. (84)

போத்துப்போற் குதிக்கும்வாதம் பொக்கென வயிற்வலிக்கும்
சேர்த்துக்கண் மினுமினுப்பு தெரிந்திடுங் காந்தலுண்டு
வேர்த்துடல் வயிற்பொருமும் மிகத்தலை யிடியுமுண்டாம்
பார்த்துநீ வாதமேக சுரமெனப் பகரலாமே. (85)

பாம்புபோல் வாதம்வந்து படுத்துமே புரளுமாகில்
வீம்புபோல் வாயுங்கோணும் வெருண்டுமேல் நடுக்கமுண்டு
தாம்புடன் பிடித்துத்தள்ளும் தக்கநா வறட்சியுண்டாம்
வீம்புட னடுக்குவாத சன்னியாய் விளம்புவாயே. (86)

குளிருடன் வாதம்வந்து கோழிபோல் நடக்குமாகில்
கழுந்திடும் வயிற்வலிக்கும் கடுப்புட னெரிப்புண்டாகும்
அழுந்திய அசதிகால்கை அடிவயிற் வலியுண்டாகும்
வழுந்திடுங் கிராணிமூலம் வந்திடும் வகையிதாமே. (87)

மயிலது போல வாதம் மருவியே நடக்குமாகில்
ஒயிலுடன் வாய்நீரோடும் ஒக்காளங் குடல்புரட்டும்
துயிலுடன் கையுங்காலும் சோர்ந்துமே வயிற்வலிக்கும்
அயிலுட னிடுப்புவெட்டும் அரோசிகக் குன்மமாமே. (88)

வாதமுங் குயில்போல்வந்தால் வயிற்வலி பொருமலுண்டாம்
பேதமா யிடுப்புநெஞ்சும் பிடரியும் வலியுண்டாகும்
நீதமாய்க் காலயர்ந்து நெடியவிங் துடைந்திருக்குஞ்
சூதமாம் வாதகுன்மம் சொல்லிய வாயுவாமே. (89)

தேரைபோல் வாதம்வந்தால் சினந்துமேற் றடிப்புண்டாகும்
கூரைபோல் பெருகுமூச்சு குரல்நெரி கபமுங்கட்டும்
பாரைபோற் காலுங்கையும் பருவலி கடுப்புண்டாகும்
ஆரைபோல் வடியுந்தண்ணீர் அதுரண குஷ்டமாமே. (90)

நரிபோல வாதம்வந்தால் நடுக்கமேல் வலியுண்டாகுஞ்
சிரியகை யுள்ளங்கால்புண் செவிமூக்குத் தடிப்புண்டாகும்
அரியமேல் மறையாய்வீழும் அசதியாங் குரல்நெருங்குஞ்
சரியிது மேககுஷ்டங் தப்பாது சொன்னேன் பாரே. (91)

நாய்போல வருகில்வாதம் நடக்கையில் அசதிகாணும்
பாய்ந்திடும் வயிற்றிற்குத்து பளிச்சென்று இடுப்புவெட்டும்
வாய்ந்துபின் நெஞ்சிற்குத்தும் வயிறுதா னிரைச்சலாகுஞ்
சாய்ந்துகண் ணெரிச்சலுண்டு சாற்றிடும் வாயுவென்றே. (92)

அட்டைபோல் வருகில்வாதம் அசதிமே லெரிவுண்டாகும்
கட்டைபோல் மதத்துக்கால்கை கண்கள்நெஞ் செரிவுமாகும்
இட்டதோர் வயிற்கனக்கும் இடுப்பினில் வலியுண்டாகும்
விட்டதோர் திமிருவாய்வு விளைந்திடு மம்மைதானே. (93)

புலிபம்மிப் பாயில்வாதம் பொருமலும் வயிற்றுநோவாம்
சலித்துடல் மெலிவுண்டாகும் தாகமுஞ் சோகமுண்டு
வலிக்குமேல் கால்கைசந்து வாய்நீருங் குடல்புரட்டும்
பலித்திடும் வயிறுபோகும் பாரிது மூலவாய்வே. (94)

நரிபோல் வாதம்வந்து கிடக்குங்கால் கையும்நோகும்
சாரியே மேல்களெல்லாந் தானது குடைச்சல்காணும்
ஊரியே யெரியுங்கண்ணும் உள்ளங்கால் வயிறுநெஞ்சு
கூரிவிந் துடைந்திருக்கும் குடல்வாத வாயுவாமே. (95)

விதமதா லெடுத்தவாத மிகரெண்டா யிரத்துநூறு
இதமுடன் தாதுவாலே இருபது வியாதி காண்பாய்
பதமுடன் மற்றநோய்கள் பாங்கினு லறியவேணும்
மதமுடன் பித்தத்தாலே வந்திடும் வியாதிகேளே. (96)

## பித்தநாடியின் குணம்.

குதிரைபோற் பித்தம்வந்து கூடியே நடக்குமாகில்
சதிருள பெலன்குறைந்து தலைவலி கனமுண்டாகும்
அதிரவே பேச்சுமுண்டு அபையமும் அழுகையுண்டு
பிதிரவே முழிக்குங்கண்ணும் பித்தமென் றுரைக்கலாமே. (97)

அம்புபோல் பித்தம்வந்தால் அசதியு மயக்கமுண்டு
பம்பமாய் முளிமுளிக்கும் பருங்குர லழுஞ் சிரிக்கும்
வம்புகள் மிகவுஞ்செய்யும் வயிர்வலி தலைகனக்கும்
வெம்புகள் பயித்தியமென்ன விளம்பலாம் வயித்தியர்தானே.

பித்தமும் நாய்போலோடில் பெருவயிற் வீக்கமுண்டு
சித்தமு மிளைத்துப்போகும் தேரைபோல் மெலியலாகும்
மத்ததோர் கண்ணெரிச்சல் மலசலம் வாய்வுங்கட்டும்
வத்தவே பித்தப்பாண்டு வகையிது வென்று சொல்லே. (99)

ஆமைபோல் வருகும்பித்தம் அசதியு மயக்கமுண்டு
ஊமைபோ லிருக்கும்நாவும் ஒருத்தலை வலியுமுண்டு
சாமைபோ லிருட்டுங்கண்ணும் தக்கதோர் மேலும்நோகும்
வாமைபோல் பித்தச்சூடும் வறட்சியுங் கபாலவாய்வே. (100)

எலிபோலே பித்தம்வந்தால் இளைப்பொடு தகையுண்டாகும்
கலிதமா யிடுப்புவெட்டுங் காலுங்கை யசதிகாணும்
பலிதமாய்க் கண்ணெரிச்சல் பளிச்சென்று நெஞ்சிற்குத்தும்
மெலிவுண்டாய் விந்துடைந்தால் மிகுபித்தச் சூடிதாமே. (101)

பூனைபோல் வருகும்பித்தம் புள்ளிபோல் மரைதான்வீழும்
தானைபோற் கையெரிந்து தலைவலி வயிற்றிரைச்சல்
ஆனைபோல் வயிறுவீங்கும் அடிவயிற் வலியுண்டாகும்
சேனைபோற் பித்தமேகந் திரண்டிடும் வகையிதாமே. (102)

உடும்புபோற் பித்தம்வந்தால் உளறிடும் நாவுங்காயும்
கடுகவே தலையில்வேர்க்கும் காந்தலுந் தலையிடிக்கும்
வெடுக்கென பிடரிவெட்டும் வெருண்டுகண் விழித்துப்பார்க்கும்
தொடுக்குமுன் பித்தசன்னி சொல்லிய விதியிதாமே. (103)

அன்னம்போற் பித்தம்வந்தால் அசதியு மயக்கமுண்டு
சொன்னதோ ரெரிச்சல்கால்கை தடுக்கென வலியுமுண்டாம்
கன்னமே குளிருங்காணும் காந்தலு மிகவுண்டாகும்
பின்னமே வாந்தியாகும் பித்தமாஞ் சுரமதென்னே. (104)

காகம்போற் பித்தம்வந்தாற் கால்கர மசதிகாணும்
வேகமா யெரியுங்கண்ணும் மேலினிற் சுரமுண்டாகும்
தாகமாம் மேல்வலிக்கும் தலையிடி யிடுப்பு வெட்டும்
சோகமாய் வயிறுமூதும் சோகையாம் பித்தமாமே. (105)

தவளைபோற் பித்தம்வந்தால் தலைவலி கனமுமுண்டாம்
கவளமாய் வயிற்பெருக்கும் கைகாலு மசதியாகும்
துவளவே அசதியுண்டாம் சொருகுங்கண் மஞ்சளாகும்
இவளவு மிருக்குமாகில் இயல்புகா மாலையாமே. (106)

போத்துப்போல் வந்தால்பித்தம் பொக்கென வூதல்காணும்
வாத்துப்போல் வயிற்பெருக்கும் வகையுட னசதியுண்டு
பார்த்துமேல் வெளுப்புண்டாகும் பளிச்சென்று யிடுப்புவெட்டும்
ஆர்த்துங்கண் மினுமினுப்புண் டாம்பித்த சோகையாமே (107)

பாம்புபோற் பிரண்டாற்பித்தம் பளிச்சென்று யிடுப்பிற்குத்தும்
வேம்புபோல் வாய்கசக்கும் மேனியும் வெளுப்புக்காணும்
வாம்புடன் கண்ணுமங்கும் வயிற்றினிற் குத்துண்டாகும்
வீம்புள பெரும்பாடாகும் மேகமும் வெள்ளையாமே. (108)

கோழிபோற் பித்தம்வந்தால் குரல்கம்மு மசதிகாணும்
ஆழிபோல் மேல்வெளுக்கும் அசதிகண் ணெரிவுண்டாகும்
தேழிய கைகால்புண்ணும் செவிமூக்குத் தடிப்புநெற்றி
பேழிபோற் பெருக்குமூச்சு பித்தகுஷ் டங்களாமே. (109)

மயிலதுபோலே பித்தம் வந்துமே நடக்குமாகில்
ஒயிலுடன் தேகமெல்லாம் உயிர்வீக்க மதிகமுண்டு
கயிலுடன் மேலுநோகும் கண்ணுநெஞ் செரிவுகாணும்
வெயில்தனி லிருக்கச்சொல்லும் மெய்மகோ தரந்தான்பாரே.

பித்தமுங் குயில்போல்வந்தாற் பெருவயி றுரும்பின்னும்
மெத்தக்கண் ணெரிவுண்டாகும் மேலது வெளுப்புமாகும்
சுத்தமாங் கண்ணுமங்கல் சுழற்றியே வயிற்வலிக்கும்
மத்ததோர் பித்தத்தாலே வருமகோ தரமுந்தானே. (111)

வரையுள தேரைபோல மயக்கிடும் பித்தம்வந்தால்
அரைந்துமே லெரிவுநோகும் அடிவயிற் வலியுண்டாகும்
நிரைவயிற் பொருமிக்காணும் நேர்மையில் லாதுதோணும்
விரைவுட னிடுப்பிலேதான் வெட்டைவாய் வென்னலாமே. (112)

நரிபோலப் பித்தம்நின்றால் நாவுலர் பயமுண்டாகும்
அரியகண் கம்மலாகும் அசதியு மயக்கமாகும்
தெரியவே வெருண்டுபார்க்கும் சிரசினிற் கனமுண்டாகும்
சரியிலாப் பித்தவாய்வு தானிதுசொன்னோம் பாரே. (113)

பித்தமுங் கீரிபோலே பிரண்டுமேல் வருகுமாகில்
சித்தமும வெவ்வேறாகும் தேகமும் உளைச்சலாகும்
நித்தமும் வயிறுபோகும் நேர்மையா சனங்கடுக்கும்
இத்தகை பித்தக்கிராணி யெனுமிது மூலந்தானே. (114)

நடந்திடும் நாய்போற்பித்தம் நடுக்கிடில் தலைசுழற்றும்
உடம்பெலாம் வலியுண்டாகும் உள்ளங்கால் கண்ணுங்காந்தும்
திடமிலாக் கிருகிருப்புந் தேகத்தி லசதிகாணும்
படர்ந்திடு நெஞ்சுகுத்தும் பார்பித்தச் சூலைதானே. (115)

அட்டைபோல் நெளியிற்பித்தம் அதிகமா யுடம்பிளைக்கும்
கட்டைபோற் படுக்கச்செய்யும் காலுகை யசதிகாணும்
விட்டிடுங் காச்சலோடு வெடுவெடென் றெழுந்திருக்கும்
இட்டதோர் கண்ணுமங்கும் எலும்புருக் கியதாம்நோயே.(116)

வந்திடும் புலிபோற்பித்தம் வாயினி லெச்சியூறும்
தந்திடும் வாந்தியாகும் தலைவலி குடல்பிரட்டும்
கந்திடும் வயிற்வலிக்கும் கண்ணது யெரிச்சலாகும்
சிந்திடும் வாய்நீர்பித்தச் சேட்டையென் றுரைக்கலாமே (117)

ஓந்திபோல் நடக்குமாகில் உள்ளங்கா லெரிச்சலாகும்
வாந்தியு மிருமல்கோளை வரும்வயி றெரிச்சலாகும்
சாந்தமு மயக்கமும்பல் தலைக்கன மிடுப்புவெட்டும்
காந்தல்வந் தெய்தும்பித்த காசமென் றிதனைச் சொல்லே. (118)

எறும்புபோ லூரிற்பித்தம் இளைப்பொடு தகையுண்டாகும்
இருமலிற் சளிதான்வீழும் ஏங்கலும் புகைச்சலுண்டும்
பொருமலு மிகவுண்டாகும் போசன மகற்றுஞ்சோகை
தருகியே அசதிகாணும் சளிகாச மிதுதான்பாரே. (119)

கதுவாலி நடைபோற் பித்தங் காணிடி லசதியாகும்
முதுகினில் வலியுண்டாகும் மூக்கடைத் திருமலாகும்
மெதுவான தகையுண்டாகும் மிக்கநல் வயிறுநோகும்
சதுரான பெலனும்போகும் சயகாசக் குணமிதாமே. (120)

காடைபோல் வந்தாற்பித்தம் கண்ணுநெஞ் செரிவுகாணும்
ஆடைபோற் கபந்தான்வீழும் அசதிமென் மேலுண்டாகும்
சாடையா யிடுப்புவெட்டும் தக்கநல் லசனந்தள்ளும்
வாடையா லுடல்மெலிந்தால் வறகாச மாகுந்தானே: (121)

கழுதைபோல் நடந்தாற்பித்தம் கடுகதே யிளைப்புண்டாகும்
பழுதுமே யில்லைகால்கை படுத்திடு முகமும்வாயும்
அழுதுகண் மங்கலாகும் அடிவயிற் கனமுமாகும்
மழுவுபோற் சுரமுண்டாகும் மந்தார காசமாமே. (122)

எருமைபோல் நடந்தாற்பித்தம் இளைப்பொடு சுவாசமோடும்
அருமையா யிருமலுண்டு அசதியும் வறட்சியுண்டு
வருமையாய் மண்டைகுத்தும் வயிற்வலி யிடுப்புவெட்டும்
உருமையாய்ச் சுவாசகாச முற்றிடும் வகையிதாமே. (123)

பசுவைப்போற் பித்தம்வந்தால் பருவயிற் குடல்பிரட்டும்
சிசுவைப்போ லுடம்பிளைக்கும் தேகத்தி லசதிதோணும்
கொசுக்கடி போலேவாய்வு குத்திடு மிருமலாகும்
பசியிலா திருக்குஞ்சாலப் பாரதி காசமாமே. (124)

மானுடு போலேபித்தம் வந்திடு மிடுப்புவெட்டும்
தானுக யிருமும்போது சலுக்கென்று ரத்தம்வீழும்
வீணுக அசதிகால்கை மேல்வலி அதிகமாகும்
காணுத தெல்லாந்தோணும் கடுரெத்த காசந்தானே. (125)

கரடிபோல் நடந்தாற்பித்தம் கண்ணெரி மிகவுண்டாகும்
நிறமுள முகமும்வேர்க்கும் நெஞ்சுநோ யதிகமாகும்
தரமுள பெலன்குறைந்து தகையுடன வலியுண்டாகும்
சிரசினிற் கனமுண்டாகும் சீக்காச காசமாமே. (126)

இந்தந்தப் பித்தநோய்க ளிரண்டுமா யிரத்திநூறு
முந்தந்தத் தாதுவாலே முப்பது வியாதிகாண்பாய்
குந்தந்த வியாதியெல்லாங் குணத்தினு லறியவேணும்
சிந்தந்தச் சிலேற்பனத்தாற் றெரிந்திடும்வியாதிகேளே. (127)

சிலேற்பன நாடியின் குணம்.

குதிரைபோற் சிலேற்பனந்தான் கூடியே வருகுமாகில்
கதியதாய் சுரமுங்காயும் கண்செவி வாயடைக்கும்
முதிரவே பிலன்குறைக்கும் முகங்கண்ணு மஞ்சளாகும்
சதிருள மூன்றுஞ்சாமந் தானெழு சிலேற்பமாமே. (128)

அம்புபோற் சிலேற்பனந்தான் அதிர்ந்துமே வருகுமாகில்
தெம்புள்ள பெலன்குறைந்து செவிரெண்டு மடைத்துக்கொள்ளும்
வம்புட னிருமலுண்டு வாயில்நீர் வடியும்பின்பு
வெம்பிடுஞ் சேத்மகாச விதமெனச் சொல்லலாமே. (129)

செலமுள ஆமைபோலச் சிலேற்பனம் நழுவுமாகில்
அலமுள யிருமல்தேமல் அசதியுஞ் சோபமாகும்
வலமுள வெள்ளைக்கோழை வந்திடு மிருமலுண்டு
பெலமுள்ள நெஞ்செரிந்து பெருகும்வெண் காசமாமே. (130)

பூனைபோற் சிலேற்பனந்தான் புடைத்துமே வருகுமாகில்
ஆனைபோல் வீரங்குன்றும் அசனமும் வெறுக்கும்பின்பு
பானைபோல் வயிறுஊதும் பத்திய யெரிவுண்டாகும்
வானையே நோக்கும்பின்பு வருமெரி காசந்தானே. (131)

அன்னம்போற் சிலேற்பனந்தான் அலரியே வருகுமாகில்
சொன்னதோ ரசதிகாணும் சுழித்துமேல் வலியுண்டாகும்
மின்னல்போல் தேகந்தோணும் வெருங்கோழை வந்துவீழும்
கன்னம்வாய் கருக்குமின்னுங் கருங்காச மென்றுசொல்லே. (132)

நல்லதோர் சிலேற்பனத்தால் நலியும்நோய் நூற்றுப்பத்து
கல்லதோர் தாதுவாலே காணலாம் வியாதியஞ்சு
வல்லப மாகநீயும் வருங்குண மறியவேணும்
மெல்லவே பூதநாடி வீறிடும் வியாதிகேளே. (133)

### பூதநாடியின் குணம்.

அம்புபோல் பூதம்வந்தால் அசதியுஞ் சோகமாகும்
தெம்புள்ள மதிமயங்கும் சிரஞ்சுத்துங் கண்ணிருட்டும்
வம்புகள் பேசுமப்பால் மனதுலா கிரியிற்பாயும்
வெம்பியே யெழும்படுக்கும் விலகாத நோயிதாமே. (134)

அன்னம்போல் பூதம்வந்தால் அசதியுங் காந்தல்காணும்
சின்னமா யிடுப்புவெட்டும் சிறிதுகொப் பழங்கள்தோணும்
சொன்ன கொப் பழங்களெல்லாம் சொடிந்துமே யிறங்கிக்கொள்ளும்
நன்னய அம்மையாகும் நாடிய வகையீதாமே. (135)

பூதத்தா லெடுத்தநோய்கள் பொருத்தமாய் மூப்பதாகும்
வீதமாய்த் தாதுவாலே வியாதியை மூன்றுகாண்பாய்
மீதமுங் குணத்தினாலே மேவியே தெரிந்துகொள்ளும்
ஆதமாய்த் தாதில்லாமல் அபாயத்தில் வருதம்நோயே. (136)

### ஐயநாடியின் குணம்.

நரம்பது சுருக்கினாலும் நடந்திடு மூச்சினாலும்
திரமான காயத்தாலும் சீரரை யாப்பினாலும்
வரமான பவுந்திரத்தாலும் வருதுடை வாலையாலும்
தரமுள்ள அசாத்தியதாது தரித்திடிற் கெடுவுகேளே. (137)

ஐயமே ஆமைபோலே அசந்துமே நடக்குமாகில்
மெய்யதா யாறுமாத மிவர்தானு மரணமாகும்
பையவே எறும்புபோல பரிந்தையம் வருகுமாகில்
பொய்யில்லை மாதமைந்து போனபின் மடிவான்பாரே. (138)

என்றிடு மையந்தானும் எருமைபோல் வருகுமாகில்
சென்றிடு மாதம்நாலில் சீவனும் மடியும்பாரு
உண்டிடும் பாம்புபோலே ஊரியே வருகிலையம்
கண்டிடு மாதமூன்றிற் கடுகென மடிவான்பாரே. (139)

மடித்திடும் நரிபோலையம் வந்துமே நடக்குமாகில்
துடிக்கவே மாதம்ரெண்டில் சொல்லுநீ மடிவாரென்றே
கடித்திடும் நாய்போலையம் கடிந்துமே வருகுமாகில்
இடித்திடு மெண்ணைந்தேநா ளிவர்களு மடிவார்பாரே. (140)

பூனைபோல் நடந்துஐயம் பொருந்தியே வருகுமாகில்
வானைநாள் முப்பத்தைந்தில் மடிவது திண்ணமாகும்
ஆனைபோ லையம்வந்து அசந்துமே நடக்குமாகில்
தானைபோல் மாதமொன்றிற் சாவது நிசமதாமே. (141)

குதிரைபோ லையம்வந்து கூடியே நடக்குமாகில்
அதிருநா ளிருபத்தேழில் அவர்களு மடிவார்பின்னும்
சதிருள குரங்குபோலத் தாண்டியே வருகிலையம்
நிதியுங்கா ளிருபத்தைந்தில் நிட்சயஞ் சாவார்பாரே. (142)

அன்னம்போல் வருகுமையம் அதட்டியாய் நடைநடந்தால்
சொன்னநா ளிருபத்தொன்றிற் சுருக்குடன் மடிவார்வீணாய்
இன்னமுங் காகம்போலே யெழுந்துமே வருகிலையம்
முன்னமே யிருபதாம்நாள் முடிவது திண்ணந்தானே. (143)

தானெனக் கோழிபோலே தானையம் நடக்குமாகில்
தேனெனப் பதினெட்டாநாள் சென்றுமே மடிவார்பாரு
கோனெனும் யானைபோலக் குதித்தையம் நடக்குமாகில்
வானெனும் பதினைந்தாம்நாள் மாள்வது திண்ணந்தானே. (144)

கிரிபோல் நடந்துஐயம் கிட்டியே வருகுமாகில்
வீரியம் பதினாறுநாள் விரைவுடன் மடிவாரென்று
கூரிய வுடும்புபோலக் கூடிய ஐயம்வந்தால்
சாரிய பதிமூன்றுநாள் சாவது திண்ணந்தானே. (145)

ஒந்திபோ லையம்வந்து உன்னியே நடக்குமாகில்
சாந்தம்போற் பனிரெண்டாநாள் தானது மரணமாகும்
பாந்தமா மட்டைபோலப் படுக்கென அய்யம்வந்தால்
காந்தலாம் பதினொன்றுநாள் கடிதினில் மடிவார்பாரே. (146)

என்றதோ ரையந்தானும் எலியென நடக்குமாகில்
கன்றிடும் பத்துநாளிற் கடுகென மடிவார்பாரு
நன்றுள சுண்டான்போல நாடியே ஐயமாகில்
சென்றிடும் ஒன்பதாம்நாள் தீரமாய் மடிவார்பாரே. (147)

பெருச்சாளி போலஐயம் பிரண்டுமே வருகுமாகில்
குறித்திடு மெட்டுநாளிற் கொன்றிடு மென்றுசொல்லு
வரித்திடு முசல்போலையம் வந்துடன் நடக்குமாகில்
தரித்திடு மேழுநாளிற் றுனிவர் மடிவார்பாரே. (148)

தானேகே சரியைப்போலத் தாண்டியே வருகிலையம்
வானேகே ளாறுநாளில் மடிவரென் றுரைக்கலாகும்
மானேபோ லையமோடி மருண்டுமே வருகுமாகில்
கோனேதா னைந்துநாளிற் குறிப்புடன் மடிவார்பாரே. (149)

பண்டுள தவளைபோலப் பண்புடன் குதிக்குமாகில்
கண்டுபார் நாலுநாளிற் கணக்குடன் மடிவார்பாரு
நண்டுபோ லையம்வந்து நடந்துமே யோடுமாகில்
வண்டுபோல் மூன்றுநாளில் மடிவது திண்ணந்தானே. (150)

மயிலைப்போ லையமோடி வந்துமே நடக்குமாகில்
ஓயிலுடன் ரெண்டுநாளில் உயிரது மரணமாகும்
குயிலைப்போ லையம்வந்து கூடியே நடக்குமானல்
பயிலுடன் சாமமெட்டில் பரிவுடன் மாளுவாரே. (151)

நாரைபோ லையம்வந்து நடந்துமே வருகுமாகில்
சாரைபோற் சாமமேழிற் றுனிவர் மடிவார்பின்பு
தேரைபோ லையந்தானும் திடீரென வருகுமாகில்
பாரைமேற் படுத்தாப்போலே பகர்சாம மாறிப்போமே. (152)

முசல்போல அய்யமோடி முடுக்குடன் நடக்குமாகில்
வசமுள சாமமைந்தில் மாளுவர் திண்ணந்திண்ணம்
பசமுள கரடிபோலப் பண்புடன் வருகுமாகிற்
குசமுள சாமம்நாலிற் கூடியே மடிவார்பாரே. (153)

சிங்கம்போ லெழுந்துஐயம் சினந்துமே வருமாகில்
தங்கம்போற் சாமமூன்றிற் றுனிவர் மடிவார்பாரு
பங்கஞ்செய் வேங்கைபோலப் பாய்ந்துமே ஐயம்வந்தால்
திங்கள்போற் சாமம்ரெண்டிற் றிரமுட னிறப்பார்பாரே. (154)

வண்டுபோற் பறந்துஐயம் வந்துமே நடக்குமாகில்
பண்டுபோ லிதுவுந்தானும் பத்துநா ழிகையில்மாளும்
கண்டுபா ராந்தைபோலே கனத்தையம் வருகுமாகில்
தண்டுபோற் சாமம்ரெண்டிற் சாவது திண்ணந்தானே. (155)

தந்திடு கயிறுபோலத் தானைய மோடிப்பின்பு
நைந்திடு மாகிலேந்து நாழிகை மரணஞ்சொல்லு
வந்திடும் அம்புபோல வருகிடி லையந்தானும்
பிந்திடா தரைச்சாமத்திற் பேச்சில்லை மடிவாரபாரே. (156)

ஐயந்தா லெடுத்த நோய்கள் அறுமூன் று நான்குமாகும்
மெய்யதா யிரண்டுகாண்பாய் மிச்சமுங் காணமாட்டாய்
செய்யவே குறிப்பினாலும் செய்கையின் பாகத்தாலும்
உய்யவேதெரிந்துகொண்டுஉண்மைகள் சொல்வாய் நீயே. (157)

வேறுசந்தம்—வியாதிவரும் விபரம்.
கட்டளைக் கலிப்பா.

பெரிய தானவி யாதிக ளுக்கெலாம்
பேணிச் செய்ய மருந்துகள் முன்னமே
அரிய தானசெந் தூரமுஞ் சுண்ணமும்
அன்பாய்ச் சொன்ன தறிந்துநீ செய்திடு
சிரிய தானவி யாதிக ளுக்கெலாஞ்
செய்பா கத்தொடு கைபாக மாகவே
சரிய தானகி யாழத்தாற் போக்கிடு
தக்க கர்மவி யாதிக்குக் கேளுமே. (158)

கர்மத் தாலேவி யாதிகள் வந்திடிற்
கண்ட றிந்துசெந் தூரமுஞ் சுண்ணமும்
மர்ம மாகவே யுள்ளே கொடுத்திடு
வகையில் லாமற்செய் விளையாட்டி னாலேதான்
வர்ம மாகவி யாதியு டம்பினில்
வந்தி டும்விப ரங்கள் தெரிந்திடு
தர்ம மாக மணஞ்செய்து வந்திடுந்
தன் மனைவியை விட்டுப்பின் நீங்கியே. (159)

தன் மனையாளுந் தானுமி ருக்கையில்
　　தாவி வேர்மனை தேடிப் புகுந்தாலும்
நன் மனைவியின் போக மிகுந்தாலும்
　　நல் லுணவென் றதிகம்பு சித்தாலும்
வன்மை யாகக் குறைத்துப் புசித்தாலும்
　　மாலையி லெண்ணெய் முழுகிக் குளித்தாலும்
சின்ன மாமலச் சிக்க லிருந்தாலும்
　　தேடிப் பாரில் வியாதிகள் வருகுமே. (160)

பாரி லிந்த விஷயத்தி னாலேதான்
　　பாரும் லேசாய் வியாதிகள் வந்திடும்
சாரி யாக வியாதிகள் வந்திடில்
　　தரு மருந்துகள் தன்னைக் கொடுத்துப்பின்
கோரி யபடி லேசாய்க் கஷாயமுங்
　　கொடுத்துச் சாந்தமுஞ் செய்து விலக்கிடு
மீறி யந்த வியாதியை விட்டிடில்
　　மேலு மேலும் வியாதிகள் மேவுமே. (161)

காலி லேமுள்ளுந் தைத்த வுடனேதான்
　　கண்ட முள்ளை யெடுத்து யெரிந்திடில்
சோலி யேதுவி யாதிக ளுமில்லை
　　தோணு மல்அதை விட்டுமே வைத்திட்டால்
வேலிக்கு முள்ளிடக் காலினிற் பாய்ந்தாப்போல்
　　மிக்கச் சீயும் பிடித்துப் புரைவைத்து
மேலி னீற்சுர சன்னியும் வந்திடும்
　　வேணு மென்று நீ தேடின தாகுமே. (162)

ஆகு மிந்த விதமிது போலவே
　　அறியா மற்சுரங் கிட்டியே வந்திடிற்
பாகு டனேகி யாழங்கள் செய்துமே
　　பண் புடனே கொடுத்து விடுத்திட்டால்
வாகுட னேசுர மும்ப றந்திடும்
　　வகையு டனே நீ பாராமல் விட்டிடில்
ஏகு மிந்தச் சுரமும் வலுத்துப்பின்
　　எல்லாச் சன்னியும் வந்துவி ளையுமே. (163)

வந்த பின்பு கியாழத்தா லாகுமோ
மாறி மாறியே செந்தூரஞ் சுண்ணமும்
விந்தை யாகக் கொடுத்து யிறக்கிடு
மேலு மேலு மதிகம தாகினல்
பந்த மானபா ஷாண மருந்தினுற்
பக்குவங் கண்டு பார்த்துநீ செய்திடு
மந்த மாகயி ருந்துவி டாமலே
வந்த வாதசு ரத்தைத் தெரிந்திடே. (164)

வாதசுரத்துக்கு வேறு சந்தம் நோட்டு.

வாத சுரமென்ருற் சுக்குடனே
வாத மடக்கி பேராமுட்டி
சீத மடக்கிய செருப்படையும்
சித்திர மூலமா மணக்கிலையும்
வேதப் படியலேர யிவைகொஞ்சம்
விதமாய்ச் சேர்த்துச் சட்டியிட்டு
நாத னுரைப்படி யிருபடி நீர்
நன்ரு யூற்றிக் காய்ச்சிடுமே. (165)

காச்சிக் காற்படி வற்றியபின்
கடின மாகவே யிறக்கிவைத்து
மாச்சிமையாக இரண்டு வேளை
வகையாய்க் கொடுத்து வசதியாக
ஆச்சர்ய மாக மூன்றுநாளும்
அருந்திய பின்பு புளியகற்று
போச்சுது வாதசுரந் தானும்
புகலும் பித்தமாஞ் சுரங்களுக்கே. (166)

பித்த சுரமது வந்துதானுற்
பிலமாஞ் செவ்விய மிளகுசுக்கு
சித்திர மூலம் நிலவேம்பு
சீந்தித் தண்டு கொளுஞ்சியுடன்
சத்தாம் விஷ்ணு கரந்தையொடு
சரியாய் வகைக்கு விராகன்ரெண்டு
சுத்து மிருபடி தண்ணீர் விட்டுச்
சொல்லிய படியே நீகாய்ச்சே. (167)

சொல்லி அரைக்காற் படியிருத்துச்
சுருக்காய்க் கியாழங் கொடுத்துவிடு
நல்ல தாகவே யிருவேளை
நாளு மூன்றது தவறாமல்
வல்லப மாகத் தான்கொடுத்து
வாகாய்ப் புளியுப்புத் தள்ளிவிடு
எல்லாம் வல்லதாம் பித்தசுரம்
ஏகும் திரும்பவ ராதுசொன்னேன். (168)

சிலேற்பன சுரத்துக்கு.

வாராய் சிலேற்பன சுரங்கண்டால்
வாத மடக்கியுங் கரிப்பானும்
சீராய்ச் சுக்கு பற்படாகஞ்
சித்திர மூலஞ் செந்தட்டியும்
பேராஞ் செவ்விய முடன்தக்க
பெலமாய் மூன்றுவி ராகனிட்டு
நேராய் நீர்படி ரெண்டுவிட்டு
நேருங் காற்படி காய்ச்சின்றே. (169)

இன்றே காற்படிக் கியாழமதை
இயல்பா யிரண்டு வேளையது
சென்று காலை மாலையுந்தான்
சிறப்பாய் மூன்று நாளிதுபோல்
நன்றாய்ச் சாப்பிடு புளித்தள்ளி
நல்ல பாக்கிலை புகையிலையும்
அன்றே சுரம்விடும் வரைதானும்
அறிந்து செய்யிந்த விதந்தானே. (170)

இந்தச் சிலேற்பன சுரத்தாலே
இரும லதுதான் வருமாகில்
சொந்தத் துளசி ஆடாதோடை
தூதுளை சங்கு ஆதண்டையும்
விந்தச் செம்முள்ளி கண்டங்கத்திரி
மிளகுதக் காளிகோழி யாவரையும்
அந்த வகைக்கொரு பிடிபிடிங்கி
அவித்திடு பிட்டுப்போ லிவைகளையே. (171)

அவித்த யிலைப்பிட்டைச் சார்பிழிந்து
அதனை யெடுத்துமே வைத்துக்கொண்டு
மெவித்த கஸ்தூரி மஞ்சளதும்
வெளிச்சிப் பிசின்திப் பிலிமூலம்
கூவி மிளகுடன் திப்பிலியும்
கூட்டரத் தைகருஞ் சீரகமும்
தாவி வகைக்கொரு விராகனிடை
சரியாய்ச் சேர்த்து இடித்துக்கொள்ளே. (172)

இடித்த மருந்தொரு காசிடைதான்
இதமாய் வடிகட்டி வைத்துக்கொண்டு
பிடித்த தேனொரு காசளவு
பெலமாய்ப் பிழிந்த சாற்றிலிட்டு
அடுத்துப் பொடியை யதிற்போட்டு
ஆறு வேளைதா னருந்திவிடு
தடித்த சிலேற்பன சுரத்தினாலே
சார்ந்த விருமலு மோடிடுமே. (173)

சுரம் இளைப்பு அசதிக்கு.

ஓடு மேல்வகைச் சுரம்பிடித்து
உலர்ந்தே யிளைப்புட னசதிகண்டாற்
றேடு திப்பிலி மிளகு சுக்கு
சீரக மூடனே ஓமமுடன்
போடு வகைக்கஞ்சு விராகனிடை
பூராய் வாங்கிக் கலந்தேதான்
ஆடும் ஆறு பங்குசெய்து
ஆறு துணிமுடிந் தேபாரே. (174)

பாரும் நீலிவேர் கண்டங்கத்திரி
பதமாஞ் சித்தா முட்டியுடன்
சேருஞ் சீந்திக் கொடிசுக்கு
திப்பிலி விஷ்ணு கிராந்தியுடன்
நேரும் பேய்ப்புடல் துளசிநொச்சி
நிலவேம் புடன் பிடி கொண்டுவந்து
ஆரும் இஞ்சி சித்திரத்தை
அக்கிராக் காரஞ் சொன்னேனே. (175)

சொன்ன வகைக்கொரு காசிடைதான்
சுகமாய் வாங்கி வைத்துப்பின்பு
பின்னுந் தும்பை யுடவேரும்
பேர்நில வாகை யதன்வேரும்
நன்னும் வெள்ளுள்ளி கொஞ்சங்கொஞ்சம்
நலமாய் வாங்கி வைத்தேதான்
சின்ன மிலாதே தானிடித்துச்
சீரா யொருசட்டி தனிற்போட்டே. (176)

போட்டுப் பதக்குநீ ரதில்விட்டு
புகழாய்த் துணிமூடி யாறுமிட்டு
நாட்டும் அடுப்பிற் ருனேற்றி
நன்று யெட்டென்றுய் வற்றவைத்து
தேட்ட முடனே துணியாறிற்
சிறப்பா யெடுத்து ஒருமுடியை
காட்ட முடனே தானரைத்துக்
காற்படி நீரிற் ருன்கலக்கே. (177)

கலக்கி அரைக்காற் படிநீரையும்
கணக்கா யொருவேளை தானருந்து
துக்க மாகவே ஆறுவேளை
துணிந்து சாப்பிடச் சுரமுடனே
நலக்க மானதோ ரிளைப்பசதி
நன்று யோடும் நில்லாமல்
சுலக்க மாகவே புளியதிகம்
தான்சே ராமற் சாப்பிடவே. (178)

சுரவீக்கத்திற்கு.

வாதம் பித்தசி லேற்பனத்தில்
வலுவாய் வீக்க முண்டாகில்
வீத இலந்தைவே ராவரைவேர்
வீழி வேருடன் கொடுவேலிவேர்
நீதம் சிறுகீரை வேருடனே
நீலிவே ருஞ்சா ரணைவேரும்
சேதமில் லாமல் வகைவகைக்குத்
திறமாய்ப் பலங்கால் கொண்டுவந்தே. (179)

கொண்டு வந்துபூ சணித்தண்டும்
கோவைத் தண்டுடன் நீர்முள்ளி
தண்டு கருமுள்ளி சுரைத்தண்டுந்
தக்க வகைக்குக் காற்பலமாய்க்
கண்ட கொளுமிச்சை பிரமியுடன்
காட்டா மணக்குவா தம்மடக்கி
விண்ட இவைகளி னிலைபிடிதான்
மிகவும் அடுக்கடுக் காகவைத்தே. (180)

கடுக்காய் திப்பிலி மல்லிமுத்தக்
காசு திப்பிலி மூலமஞ்சள்
அடுக்காய் வகைக்கு விராகனிடை
அன்பாய் வாங்கியி டித்துமேதான்
துடுக்காய்ப் பாண்டந் தனிலிட்டுச்
சுகமாய் நீர்படி யாறுவிட்டு
முடுக்கா யடுப்பினிற் றுனேற்றி
முடிவா யெட்டொன் றுய்க்காய்ச்சே. (181)

காய்ச்சி யெடுத்த கியாழமதிற்
கணக்கா யரைக்காற் படியெடுத்து
தாழ்ச்சியி லாமற் சீரகமுந்
தக்க சுக்கரைக் காற்பலமும்
வாய்ச்சி யுடனே தானரைத்து
வடித்த கியாழ மதிற் கலக்கி
மாட்சி யுடனே யிம்மருந்தை
வகையா யிப்படித் தானருந்தே. (182)

இப்படி யாக மூன்றேநாள்
இயல்பாய்க் காலை மாலையுமே
செப்ப முடனே தானருந்து
திறமாம் புகையிலை புளிதள்ளு
ஒப்ப முடனே அசதிசுரம்
ஓடிப் படர்ந்திடும் வீக்கமெல்லாந்
தப்பித மில்லாமற் றுனருந்து
சரியாய்ப் போனபின் பேபாரே. (183)

பழைய சுரத்துக்கு.

போன சுரமது பழையபடி
புகழாய்ப் பின்பு வருமானல்
ஆன வுடலுந் தந்தமுமே
அன்பாய் வலியுடன் விட்டுவரும்
கான வேயிந்தப் பழையசுரம்
கடினப்படுத்துமே யிதுதனக்கு
ஏன முடனே கியாழமுறை
இயல்பாய் நூலின் படிசெய்யே. (184)

நல்ல மூக்குத்திப் பூடுடனே
நவில்சீ ராசெங் கழனிவேரும்
வல்ல விஷ்ணு கிராந்தியுடன்
வாகாய்ப் பற்ப டாகமுமே
செல்லத் துளசிவேர் தும்பைவேருஞ்
சீரார் முக்கொழுஞ் சியின்வேரும்
எல்லாம் வகைக்குக் காற்பலமாய்
இனிமை யுடனே கொண்டுவந்தே. (185)

வந்த மருந்துடன் திரிகடுகும்
வகையாய் மூன்று விராகனிடை
சிந்திப் போகா மலேயிடித்துச்
சீரா யாவுமே சட்டியிட்டு
பந்த மில்லாம லிருபடி நீர்
பாங்கா யூற்றி அடுப்பேற்றி
விந்தையுடனே யெட்டொன்ருய்
மிகவுங் காலே காய்ச்சிவிடே. (186)

காலே அரைக்காற் படிவீதம்
கணக்கு மூன்று நா ளாறுவேளே
சீல முடன்தான் நீயருந்தச்
சென்று பறக்குமே பழையசுரஞ்
சால முடனே புளிபொடியுந்
தள்ளு வெற்றிலே பாக்குடனே
கோலப் புகையிலே தள்ளிவிட்டாற்
கூராய்ப் பழஞ்சுர மதுபோச்சே. (187)

பழைய சுரத்துக்கு நெய்,

போச்சு பழைய சுரமதற்குப்
புகழக் கேளு நெய்தன்னை
வாச்சு பொன்னுங் காணிவேர்
வகையாம் நெல்லி மூள்ளியுமே
பாச்சும் அதிமது ரத்தோடு
பண்பாய்ப் பூசணி விரையுடனே
தோச்சில் லாவெள் ளரிவிரையும்
சொன்ன விராக னிடைகொணர்ந்தே. (188)

சொன்ன அமுதப் பால்படிகாற்
சுகமாய் வாங்கி மேற்கண்ட
நன்னய மான சரக்குகளை
நலமாய்ப் பால்விட் டரைத்தெடுத்து
சின்னமி லாத ஆவின்நெய்யைச்
சீராய்க் காற்படி சட்டியிட்டு
முன்ன மரைத்த சரக்குகளை
முடியப் போட்டுக் கரைத்துவிடே. (189)

கரைத்த மருந்தை அடுப்பேற்றிக்
கணக்காய் மெழுகு பதங்காய்ச்சி
உரைத்த படியிரு வேளையுமே
உண்பாய் கழஞ்சி ரண்டுவீதம்
நிரைத்த படியந் நெய்யதனை
நேரா யுடம்பினிற் பூசிவிடு
சிரத்தைப் படியே மூன்றுநாள்
சீராய்ச் சாப்பிட் டறிவாயே. (190)

அறிவாய் சுரங்க ளகன்றுவிடும்
அன்பாய்ப் புளிபுகை யிலையுடனே
தெரிவாய்ப் பாக்கிலை பால்மோருஞ்
சிறப்பாய்த் தள்ளி விடவேணும்
பரிவா யிதுபோற் செய்துவரில்
படிப்படி யாக விலகிவிடும்
சரியாய்த் தெரிந்து செய்வாயேல்
தக்க காந்தலும் பறந்திடுமே. (191)

குளிர்சுரம் வாந்திக்கு.

காந்தல் குளிருடன் வாந்தியுமே
கண்டிடிற் கால்கை யசதிவரும்
பாந்த மாகவே வயி றுளைச்சல்
பாகுபோற் சீதக் கழிச்சலுறும்
சாந்தமா யிடுப்புங் கடுத்திருக்கும்
தக்க வாயதும் வறண்டிருக்கும்
ஆர்ந்த கண்பச்சை யாகிவிடும்
அன்பாய்ச் சீத சுரமதற்கே. (192)

இதற்குக் காத்தொட்டி மொசுமொசுக்கை
இலையுடன் விஷ்ணுகி ராந்தியுமே
சதிராய்ப் பற்ப டாகமுடன்
சம்பங்கிக் கிழங்குடன் வெள்ளறுகும்
விதியா யிலவகை காற்பலந்தான்
வேண்டி யுரலிற் போட்டிடித்துப்
பதியாஞ் சுக்கு மிளகரைக்காற்
பலமு மிடித்துப் பாண்டமிட்டே. (193)

பாண்ட மிட்டுப் படிதண்ணீர்
பண்பாய் விட்டு அடுப்பேற்றி
வேண்டும் படியே தீயெரித்து
மிகவரைக் காற்படி யாகவிட்டு
நீண்ட கியாழம் வடிகட்டி
நேரரைக் காற்படி தானருந்த
ஆண்டவ ருடைய உதவியினால்
அப்பா சீதசு ரம்போமே. (194)

போமே குளிர்சுரம் வாந்தியும்போம்
போக்காய் மூன்றுநா ளாறுவேளை
நாமே யருந்திட வாந்தியும்போம்
நாடும் புளியுப்புப் புகையிலையும்
ஆமே பாக்கில மோர்பாலும்
அகலத் தள்ளியே விடவேண்டும்
தாமே சீதசு ரம்போகும்
தக்காது மாந்த சுரம்பாரே. (195)

மாந்த சுரமது வந்திடிலோ
வயிறு ஊதியே மந்தப்படும்
காந்த லாகியே வாந்திவருங்
கண்ணுஞ் சிவந்திடும் வறட்சியுண்டாம்
பாந்த முடன்கே ளிதுதனக்குப்
பக்குவ மானகி யாழமது
சாந்த முடனே சொல்லுகிறேன்
சரியாய் நல்ல படிசெய்யே. (193)

நல்ல தும்பை பேய்ப்புடலும்
நலமாந் துளசி கண்டங்கத்திரி
வல்ல சுக்குடன் திப்பிலியும்
வாகாம் நெல்லிப் பருப்புடனே
செல்லும் வேப்பின் புண்ணுக்குந்
திறமா மிளகும் வகைவகைக்கு
மெல்ல வைந்து விராகனிடை
மெதுவாய் வாங்கி யிடித்துவையே. (197)

இடித்த பொடியைச் சட்டியிட்டு
இதமாய் நீர்படி நாலுவிட்டுப்
பிடித்த பிடியா யடுப்பேற்றிப்
பெரிதா யரைப்படி யாய்க்காய்ச்சிப்
வடித்துக் காலை மாலையுமே
வாகா யரைக்காற் படியருந்திக்
குடித்து நீயு மிதுபோலக்
கூடியே மூன்று நாளருந்தே. (198)

அருந்தும் போது புளியுப்பை
யகற்றிக் கஞ்சி யாய்க்கொடுத்துத்
திருந்தும் பொடிபுகை யிலையோடு
சேர்ந்த பாக்கிலை தள்ளிவிடு
மருந்தா மிந்தக் கியாழமதை
வகையோ டுண்டு வருவாயேற்
பொருந்தும் மாந்த சுரந்தானும்
பூராய்ப் பாரும் பறந்திடுமே. (199)

கணைச் சுரத்திற்கு.

பாருங் கணைச்சுரம் வருமாளுற்
பருத்த நாசியும் வறண்டுவிடுங்
கூருந் தேகமுந் தான்மெலியுங்
கொடிதாய் நாவும் வறட்சியுறுஞ்
சேருங் காந்தல் குறைவாகுந்
திக்கென நெஞ்சு தானடைக்குந்
தேருங் கால்கை யசதிதருந்
தீரும் வகைதனை யுரைப்பேனே. (200)

உரைக்கும் வில்வம் ஆத்தியிலை
உற்ற கருவே லிலந்தையிலை
நிறைக்குங் கண்டு வணங்கியிலை
நேரா யைந்தும் பிடிகொணர்ந்து
வரைக்குஞ் சம்பங்கிக் கிழங்குடனே
வாகாய்ச் சீரகங் காற்பலமுங்
குறைத்தி டாமலே புளித்ததண்ணீர்
கூரா யிருபடி சட்டியிட்டே. (201)

இட்டுச் சட்டியை யடுப்பேற்றி
எட்டி லொன்ருய் வற்றவைத்துக்
கட்டுட னேதான் காலைமாலை
கணக்கா யரைக்காற் படியருந்து
திட்ட முடனே மூன்றுநாள்தான்
திறமாய்க் கொடுத்து வந்திடவே
விட்டுக் கணைக்சுர மோடிவிடும்
வேண்டும் பத்தியந் தான்கேளே. (202)

பத்தியங் கேளு புளியுப்பும்
பண்பாய்ப் பொடிபுகை யிலைதள்ளு
நத்திய தான பால்மோரும்
நலமாய்த் தள்ளி விடவேண்டும்
சுத்தி வந்த தோஷமெல்லாஞ்
சொல்லா தோடிப் பறந்துவிடும்
புத்திய தோடு பிழைத்திடவே
புகழாய்ச் சொன்னேன் யாக்கோபே. (203)

மாந்தக் கழிச்சலுக்கு.

சொன்ன மாந்தக் கழிச்சல்வரிற்
சுகமா மருந்து தனைக்கேளு
கன்ன லான அகத்தியிலை
கணக்கா யொருபிடி கொண்டுவந்து
முன்ன மாகச் சட்டியிட்டு
முருகக் கருக வறுத்தபின்பு
நன்னய மாக யிருபடிமோர்
நன்ரு யூற்றிக் காய்ச்சிவிட்டே. (204)

காய்ச்சிக் காற்படி யாகவிட்டுக்
கணக்கா யரைக்காற் படியெடுத்து
தாட்சியில் லாம லொருவேளை
தானே யருந்தக் கொடுத்துவிடு
மாட்சி மையாக மூன்று நாளும்
வகையாய்த் தானுங் கொடுப்பீரேல்
ஏச்சிலா மாந்தக் கழிச்சலது
யில்லா தோடு மினிக்கேளே. (205)

இனிமை யுடனே யிதில்வீக்க
மியல்பாய்க் கண்டிடில் வகைகேளு
கனிவா யுகாவேர் சாரணைவேர்
கானு மேனிவேர் மாதுளைவேர்
பணிவா யாவரை வேர்வசம்பு
பாங்காஞ் சுக்கு முதலாகத்
தனியா வகைவகை காற்பலமாய்த்
தக்க படிக்கதை வாங்கிவைத்தே. (206)

வாங்கிடு வெள்ளைப் பூண்டையுமே
வகையா யரைக்காற் பலமெடுத்துத்
தாங்குந் துணியதி லேமுடிந்து
தக்க சட்டியி லேபோட்டுப்
பாங்கா யிரண்டு படிதண்ணீர்
பலமாய் விட்டு அடுப்பேற்றி
ஓங்கும் படியாய்த் தீயெரித்து
உடன்காற் படியா வத்தவையே. (207)

வத்த வைத்துப் பார்த்திறக்கி
வகையா யரைக்காற் படிநீரைச்
சித்த முடனே தானருந்தத்
தீரு மாந்தக் கழிச்சலுந்தான்
பத்த முடனே யிருவேளை
பாங்காய்ச் சாப்பிடச் சுரம்போகும்
மத்த பொடிபுகை யிலைதள்ளி
வந்தால் வியாதி தீர்ந்திடுமே. (208)

மூன்றுமுறைக் காய்ச்சலுக்கு.

தீர்ந்திடு மூன்று முறைக்காய்ச்சல்
சீரில் லாமல் வந்தாக்கால்
ஆர்ந்த புங்கங் கொழுந்துடனே
அன்பாய் வெள்ளுள்ளி மிளகுசுக்கைச்
சேர்ந்து அரைத்துக் கனியளவு
திரட்டி உண்டிடக் காய்ச்சல்விடும்
வார்ந்த மூன்று முறைபோகும்
வாந்த லாகும் நசியமொன்றே. (209)

நசியம்.

ஆகும் ஓம மிளகுடனே
அன்பாய்ப் பூத்த தைவேளை
ஏகு மிலுப்பைக் கட்டியுடன்
இதமாய் வெள்ளுள்ளி பற்படாகம்
வாகுட னே நீ தான்வாங்கி
வளமாய்க் கழற்சிக் காயளவு
மோக முடனே தானரைத்து
மூக்கிற் பிழிந்திட வோடிடுமே. (210)

ஆக்கிராணம்.

ஓடு மின்னொரு ஆக்கிராணம்
உயர்வாய்ச் சொல்வேன் கேளுமினி
வேடு மிளகு வசம்போமம்
வெற்றிலைக் காம்புடன் வெள்ளுள்ளி
காடுங் கச்சாந் தகரையுடன்
கச்சக் கருவாட்டு மண்டையுமே
கூடிய தெல்லாந் தான்நசுக்கிக்
கூராய்த் துணியிற் கட்டிவிட்டே. (211)

கட்டுட னேமேற் காந்தல்வரிற்
கடிதாய் நாசியி லுருஞ்சிவிட
ஒட்டிடு மூன்று முறைக்காய்ச்சல்
ஓடிவாடிப் பறந்துவிடும்
கெட்டி யிரண்டா முறைக்காய்ச்சல்
கேட்ட வுடனே ஓடிவிடும்
அட்டி நாலா முறைக்காய்ச்சல்
அகல மருந்து தனைக்கேளே. (212)

மருந்தின் விபர மதுகேளு
வகையா யரைப்படி மோர்வாங்கித்
திருந்தும் நல்லெண்ணெய் படிவாங்கித்
திரிகடு குடன்கோஷ் டந்தானும்
அருந்தும் நன்னு ரியின்வேரும்
அழகாங் குருந்தொட்டி யின்வேரும்
பொருந்துஞ் சந்தனக் கட்டையின்வேர்
புகழா கியமர மஞ்சள்வாங்கே- (213)

வாங்குஞ் செவ்வள் ளிக்கொடியும்
வளமா முத்த மரிதாரந்
தாங்குங் கடல்நுரை செவ்வியமுந்
தக்க வாக்கு அதிமதுரம்
பாங்கு மிவைகள் வகைவகைக்குப்
பரிவாய் மூன்றுவி ராகனிடை
ஓங்கும் படியாய்த் தான்வாங்கி
உடனே மோர்விட் டரைத்துவிடே. (214)

அரைத்தே மோரிற் றன்கலக்கி
அன்பாய்ச்சட்டி தனில்விட்டு
நிரைத்தெள் ளெண்ணெய் தானுமிட்டு
நேராய்க் கலக்கி அடுப்பேற்றிக்
கரைத்துக் காய்ச்சி மெழுகுபதம்
கண்டு வடித்துத் தைலமதை
மறைத்து நெற்புடம் மூன்றேநாள்
வைத்தெடுத் திடுவாய் தைலமிதே. (215)

தயிலந் தனையும் வெயிலில்வைத்துத்
தயவா யெடுத்துக் கொண்டபின்பு
ஒயிலாய் வார மிருமுறைநீ
உதகத் தைலந் தான்தேய்த்து
பயிலா திலுப்பைக் கட்டியினுற்
பாங்காய்த் தோய்த்து வெந்நீரில்
வெயிலிற் குளித்து உடம்பதனை
மிகவும் உலர்த்திடச் சுரப்போமே. (216)

சுரமே தாபச் சுரமாகிற்
சொல்லுந் தாகமும் விக்கலுறும்
வரமாங் குளிரு முண்டாகும்
வாய்நா வரண்டு தாகமுறுந்
திரமாய் வயிறு தான்கழியுஞ்
சிவப்ப தாகிடும் கண்விழியும்
நிரமாந் தாகச் சுரமாகும்
நேர்மை யுடன்சொல்லக் கேள்மருந்தே. (217)

சொல்லக் கேளும் ருக்மானே
சுர நீர் தாகம் போகுதற்கு
கொல்லன் கோவைக் கிழங்குடனே
கூடும் ஆடா தோடைசுக்கு
நல்ல அதிமது ரம்வகைக்கு
நலமாய்க் காற்பலந் தான்வாங்கி
எல்லாஞ் சட்டி யினிற்போட்டு
இதமா யறுபடி நீர்விட்டிடே. (218)

விட்ட பின்பு அடுப்பேற்றி
வியப்பாய்த் தீயுந் தானெரித்து
எட்டி லொன்ருய் வற்றவைத்து
இதமாய்க் காய்ச்சி இறக்கியபின்
சட்ட முடனே தாகத்திற்குச்
சரியா யரைக்காற் படிவீதம்
திட்ட முடனே தான்கொடுக்கத்
தீருந் தாகசு ரந்தானே. (219)

தாகம் நீங்கிச் சுரமட்டுந்
        தானே யிருக்கில் மருந்துசொல்வேன்
யோகுஞ் சுக்கு வெள்ளுள்ளி
        போரா மல்லி திப்பிலியும்
ஏகு மிளகு அதிமதுரம்
        இவையா வுந்தான் பொடிசெய்து
வாகா யிஞ்சிச் சாற்றிலேதான்
        வகையாய்க் கொடுத்த பின்கேளே. (220)

கொடுத்துப் பின்னு மறுவேளை
        குடிக்கச் சுரமு மோடிவிடும்
விடுத்துப் புளிபுகை யிலைதள்ளு
        மிகவே கஞ்சி யருந்திவிடு
தடுத்து யிந்தச் சுரந்தானும்
        தலையு மெடுக்கா தோடிவிடும்
அடுத்தே யாகோப் சொன்னபடி
        அண்ட வாத முறைகேளே. (221)

அண்ட வாதத்திற்கு.

அண்ட வாத மிகவந்தால்
        அதற்கு மருந்து தான்கேளு
கண்ட முருங்கைப் பூவைத்தான்
        கனியள வாக வேயரைத்துக்
கொண்ட ஆவின் பாலதனிற்
        கொடுத்து அருந்தச் செய்தாக்காற்
தெண்டஞ் செய்து ஓடிவிடுந்
        திறமா மிதுதான் தப்பாதே. (222)

தப்பா தின்னுஞ் சொல்லுகிறேன்
        சரியா யொருபக்கம் வீக்கம்வரில்
அப்பா தப்பா தைவேளை
        அருமை யாகத் தான்கசக்கி
நப்பா மருகாற் பெருவிரலில்
        நகத்திற் பச்சிலை வைத்தேதான்
செப்பி மூன்றுநாள் கட்டிவிடத்
        திரண்ட வீக்கமும் பறந்திடுமே. (223)

பறக்கும் வாத மின்னமுங்கேள்
பாரு மதிலே போகாட்டாற்
சிறக்கு மூருங்கை வேர்ப்பட்டை
திறமாய் வாங்கி யரைத்துப்பின்பு
நிறக்கும் விளாங்கா யளவாக
நேரா யுருட்டி வைத்துக்கொண்டு
மறக்குங் கருங்கு ருவையரிசி
வகையா யரைப்படி மாவுசெய்யே. (224)

மாவுட னேவேர்ப் பட்டைதனை
வகையாய்ச் சேர்த்துக் கழிக்கிண்டி
மேவும் படிசர்க் கரைதொட்டு
விரைவாய்ச் சுடச்சுட அருந்திவிடு
தாவு மூன்றுநா ளிந்தப்படி
சரியாய்க் கிண்டித் தின்பாயேல்
நோவும் பறந்திடும் புளியுமுப்பும்
நுண்மை யாகவே தள்ளிவிடே. (225)

ஏரண்ட வாதம்.

விட்டே ரண்ட வாதம்வந்தால்
விதமாய் முழுகத் தைலஞ்சொல்வேன்
கட்டுஞ் செம்முள்ளி வேருடனே
கார்த்திகைக் கிழங்குங் கொண்டுவத்து
திட்ட முடனே ரண்டமெனுஞ்
செடியின் வேர்முருங் கைவேருஞ்
சட்ட முடனே வகைவகைக்குத்
தனித்தனிப் பத்துப் பலங்கொணர்ந்தே. (226)

பலமா யிடித்துப் பாண்டமிட்டுப்
பாணி துணிநீர் விட்டேநீ
நலமாய்க் காய்ச்சி யெட்டொன்ருய்
நன்ருய்க்கியாழந் தன்னில்நல்ல
குலமா வின்பால் படிரெண்டு
கூடநல் லெண்ணெ யொருபடியும்
பெலமாய் விட்டுப் பின்சரக்கைப்
பேணிச் சொல்வேன் ருக்மானே. (227)

சொல்லும் ஓமம் மகிற்கட்டை
சுக்கிந் திப்பு திப்பிலியும்
வெல்லுஞ் சதகுப்பை கோஷ்டமுடன்
விதமா மஞ்சிட்டி கல்மதமும்
நல்லும் அரத்தை அதிமதுரம்
நலமாந் தேவ தாரமுடன்
செல்லுஞ் சாரணை வேருடனே
சேருங் கொடுவேலி வேருடனே. (228)

வேருடன் சங்க வேரையுமே
விதமாய் வகைவகை தன்மையுடன்
சேரு மிரண்டு கழஞ்சுவீதம்
திறமா யெடுத்து அரைத்துடனே
பாரு முன்வைத்த கியாழமதிற்
பாலுட னிதனைக் கரைத்தொன்றாய்க்
கோரு அயத்தின் கரண்டிகொண்டு
குறிப்பாய்க் கிண்டிக் காய்ச்சிவிடே. (229)

காய்ச்சி மெழுகு பதம்வந்தாற்
கருணை யுடனே மிகவடித்துத்
தாட்சி யில்லா மற்றேய்த்துத்
தலையது முழுகி வரவேதான்
மூச்சிமை யாக யிப்படியே
மூன்று நாளைக் கொருதடவை
மாட்சிமை யாக முழுகிவர
வாத மெல்லாம் பறந்திடுமே. (230)

பறக்கும் படிநீ காலையினிற்
பார்த்துத் தைலத்தைத் தான்தேய்த்துச்
சிறக்கும் படியா யரப்பதனைத்
தேய்த்து வெந்நீர் விட்டினிதாய்
திறக்கும் படியாய்த் தலையுலர்த்தி
நேராய்ப் பத்தியங் கொடுத்துவிடு
சுரக்கு மேரண்ட வாதமது
சொல்லாம லோடி விடும்பாரே. (231)

விரைவாதத்திற்குக் கம்பளிக்கட்டு.

ஓடிப் பறக்கா விடிலோதான்
உடனே யின்னொரு வகைகேளு
தேடிக் கம்பளிக் கயற்முறுக்கித்
திறமாய்ச் சேங்கொட்டைப் பால்தடவி
நாடி யேரண்ட வாதத்திற்கு
நலமாய்க் காலை நீமாறிச்
சாடிக் கெண்டயிற் கட்டிவிடத்
தணலாய் வெந்து புண்ணுமே. (232)

வெந்த புண்ணு றும்போது
மிகவே வீக்கமும் வற்றிவிடும்
பந்தம தாக யிருவிரையும்
பருத்து வீக்க முண்டானாற்
சிந்தவே ரெண்டு காலினிலுஞ்
சிறப்பாய்க் கெண்டையிற் கட்டிவிடில்
வந்த யிருகால் புண்ணாகும்
வாகாய் விரைவா தம்போமே. (233)

சகல வாதத்திற்கு.

சகல வாதமும் வந்தாக்காற்
றானே யெருக்கிலை காய்பூவு
அகல முடன்வா தம்மடக்கி
அரிய நொச்சியுங் கருநொச்சியும்
புகழும் வேலிப் பருத்திஐந்தும்
பூரு வகைக்குக் காற்படியாய்
இகலாச் சாறு தான்வாங்கி
இதமாய்ச் சட்டி யிட்டுவையே. (234)

வையே ரண்ட முத்துதனை
வாகா யிடித்துத் தானெடுத்து
பைய வேமுன் சாற்றிலிட்டுப்
பாங்காய்த் தீபம் போலெரித்து
மெய்யாய்க் காய்ச்சி யெண்ணெய்தனை
மிகவு மொருபடி யிறுத்துவைத்துச்
செய்யுங் கடுகு பூராவுஞ்
சீராய்த் தள்ளிப் பின்கேளே. (235)

தள்ளிப் பின்பு சரக்குவகை
சாற்றக் கேளும் ருக்மானே
உள்ளி கடு கஸ்தூரிமஞ்சள்
உரிய கருஞ்சீ ரகமஞ்சள்
தெள்ளி மிளகு வெளிச்சிப் பிசின்
சேரும் வசம்பு வாய்விளங்கம்
புள்ளி மூன்று வராகனிடை
புகழா யிடித்துத் தூள்சேரே. (236)

சேருமுன் வைத்த யெண்ணெயினிற்
றிறமாய்த் தூள்களெ லாம்போட்டு
பாரு மருந்தெல் லாங்கிண்டிப்
பதமாய்க் காய்ச்சி யிறுத்தெடுத்துத்
தேரும் படிநீ நெற்புடத்திற்
சிறக்க வைந்துநாள் வைத்தெடுத்து
நேரும் படியாய் வெயிற்புடத்தில்
நேரொரு சாமம் வைத்துவிடே. (237)

சாமம் வைத்த தைலமதைத்
தக்க படியாய் மேல்முழுதும்
சேம மடையத் துவாலே யிட்டுத்
திறமா யிலுப்பைப் புண்ணாக்கை
வாம முடனே தானரைத்து
மகிழ்வாய் வெந்நீர் முழுகிவர
நேம முடனே வாதமெல்லாம்
நில்லா தோடிடும் வகைபாரே. (238)

முழங்கால் வாதத்திற்கு.

வகையாய் முழங்கால் வாதம்வரில்
மகிழ்வாய் வெள்ளைப் பூண்டுடனே
திகையாம் புத்தாஞ் சோறுதனைத்
திறமா யொருபலந் தானெடுத்துத்
துகையா யிலைக்கள்ளி திருகுகள்ளி
சொல்லுமெ ருக்கிலை மூன்றினிலும்
பகையில் லாத பாலதனைப்
பாங்காய்த் தனியா யெடுத்துவைத்தே. (239)

எடுத்த பால்கள் மூன்றையுமே
யிதமாய்ச் சேர்த்து முன்சரக்கைத்
தடுத்த கல்வந் தனிற்போட்டுத்
தானரைத் துடனே வழித்தெடுத்து
விடுத்த முழங்கால் தனிற்பூச
மிகவே வாதம் விட்டோடும்
அடுத்த மூன்று நா ளிதுபோல
அடைவாய்ப் பூசிடத் தீர்ந்திடுமே. (240)

முன்வாதத்துக்குக் கட்டுமருந்து.

தீரு முழங்கால் தனிற்கட்டத்
திறமாம் நொச்சி யிலையோடு
நேரு கின்ற கல்வாழை
நிகழ்த்தும் வாத மடக்கியிலை
பாரும் வேலிப் பருத்தியிலை
பாங்கா யிடித்து முழங்காலிற்
றேரும் படிக்குக் கட்டிவிடத்
தெளிவாய் முழங்கால் வலிபோமே. (241)

வாதத்திற்குப் பூச்சுமருந்து.

போமே முழங்கால் வலியெடுத்தாற்
புகழாய் மருந்து தனைக்கேளும்
வாமே யிலைக்கள்ளிப் பாலுதனை
வகையாய் முழங்கால் தனிற்பூசி
தாமே தூர்மண்ணைக் கொண்டுவந்து
தயவாய் முழங்கால் தனிற்போடு
ஆமே மூன்று நா ளிப்படியே
அடைவாய்ச் செய்ய வலிபோமே. (242)

முகவாதத்திற்கு.

செய்யக்கேளு முகவாதந்
தீர மருந்து தானுரைப்பேன்
உய்யும் நல்லெண்ணெய் புங்கெண்ணெய்
உரமிகு வேப்பெண்ணெய் மூன்றினிலும்
நய்யும் வகைக்குக் காற்படியாய்
நலமாய் வாங்கி மூன்றினையும்
மெய்யாய்ச் சட்டி தனில்விட்டு
வேண்டு மருந்தை நீ கேளே. (243)

மருந்து நிலவாகை அசுவகெந்தி
வாகாய் வேலிப் பருத்தியிலை
தெரிந்தே மூன்றும் வகைவகையாய்த்
திருந்த விடித்தரைப் படிவாங்கிப்
பொருந்தும் வசம்பு கருஞ்சீரகம்
பூராய்க் கெந்தகம் வெள்ளுள்ளியுந்
திருந்த மூன்று வராகனிடை
சேரும் வகைவகை வாங்கிவிடே. (244)

வாங்கிப் பச்சிலைச் சாறுவிட்டு
வகையா யரைத்துத் தானெடுத்து
ஓங்கி யாவுஞ் சட்டியிட்டு
ஒழுங்காய்க் கரைத்து அடுப்பேற்றி
பாங்காய்த் தீபம் போலெரித்துப்
பதமாய்க் காய்ச்சி யிறக்கியேதான்
சாங்க முடனே பூசிவரத்
தாங்கா முகவா தமும்போமே. (245)

முகமாம் நடுக்கு வாதம்வந்தால்
முடிக்கு மருந்தைச் சொல்லுகிறேன்
நகமாம் அழிஞ்சிப் பட்டைதனை
நலமாய்ப் பலமொன்று மாவாக்கிச்
சுகமாய்க் கருங்குரு வையரிசி
சூழும் படிகால் மாவாக்கி
இகமா யிரண்டுந் தான்சேர்த்து
யிதமாய்ச் செய்ய வகைகேளே. (246)

செய்யுஞ் சட்டியிற் பால்விட்டுத்
திறமா யடுப்பிற் காயவைத்து
உய்யும் படியாய் மாவிட்டு
உருளக் கிண்டி யாறுமுன்னே
நெய்யும் பனைவெல் லமுங்கூட்டி
நேரா யுண்ணக் கொடுத்துவிடு
வையம் மதிக்க நடுக்குவாதம்
மாறி யோடிப் பறந்திடுமே. (247)

பறக்கு மூன்றுநா ளாறுவேளை
பத்திய மாகவே உண்டுவரில்
சிறக்கும் புளியுப்புப் புகையிலையுஞ்
சீராய்ப் பத்திய மாயிருந்து
நிறக்கும் படியொன் பதுநாளில்
நேராய்ச் சகலமுந் தான்சேரு
மறக்க வேண்டா மென்றேதான்
வாகா யாகோபு சொன்னேனே. (248)

சுளுக்கு வாதம்.

சொன்னதோர் சுளுக்கு வாதம்வரிற்
சுகந்தநன் ஞரிவே ரொருபலமும்
நன்னு மளிஞ்சிவே ரொருபலமும்
நன்ரு யிடித்து மாவாக்கி
அன்ன கருங்குருவை யரிசி
அரைப்படி தன்னைத் தான்திரித்துச்
சின்னமில் லாமற் பாலைவிட்டுத்
திரமாங் களியாய்க் கிண்டிவிடே. (249)

கிண்டுங் களியைத் தானெடுத்துக்
கெடியாய்த் தின்றிடும் ஆறிடாமல்
கண்டொரு நாளைக் கிருவேளை
களியைத் தின்று பத்தியமாய்
விண்டே ழாநாள் தலைமுழுகு
விளங்கும் புளியுப்பைத் தான்சேரு
பண்டு வந்திடுஞ் சுளுக்குவாதம்
பாருநில் லாமற் பறந்திடுமே. (250)

கடுப்பு வாதம்.

பறந்து வருகிற கடுப்புவாதம்
பாங்காய் வந்திடிற் றேகமெலாஞ்
சிறந்த கடுப்புண் டாவதற்குச்
சீராய் மருந்து தனைக்கேளு
திறந்த நொச்சிலை பலமைந்து
நேராஞ் சதகுப்பை பலமொன்று
சுறந்த உளுந்திற் பத்துப்பலம்
சுகமா யெடுத்து வைத்துவிடே. (251)

எடுத்துக் கார்த்திகைக் கிழங்குதனை
யிதமாய் மூன்று பலம்வாங்கி
விடுத்து யிதுவெலாந் தானிடித்து
மிகவே நல்ல பாண்டமிட்டு
அடுத்து அதிலே தூணீ நீரு
அன்பா யூற்றி யடுப்பேற்றிக்
கடுத்து யெட்டொன் ருய்க்காய்ச்சிக்
கடுக யிறுத்து எடுத்துவிடே. (252)

இறுத்து நல்லெண்ணெ யொருபடியும்
இதமா யாவின்பால் நாலுபடி
திருத்தும் உத்தா மணிச்சாறைத்
திறமா யிரண்டு படிகூட்டிக்
கருத்துப் போலொன் ருய்ச்சேர்த்துக்
கலக்கிப் பாண்டத் தில்வைத்து
பொறுத்த சதகுப்பை யதிமதுரம்
புகழாந் திரிகடு கதுதானே. (253)

தானே அசுவ கெந்தியின்வேர்
சாரணை வேருடன் வகைவகைக்குக்
கோனே காற்பலந் தான்வாங்கிக்
குறியா யரைத்துக் கூடவிட்டுக்
வானே யொன்ருய்த் தான்கலக்கி
மகிழ்வா யடுப்பு தனிலேற்றிக்
காணே ஒருசாதி விறகாலே
காய்ச்சு தீபம்போற் றீயெரித்தே. (254)

தீபம் போலவே காய்ச்சியேதான்
சிறப்பாய் மெழுகு பதம்பார்த்துத்
தாபப் படாதே நீயிறக்கித்
தனியே மறுசட்டி தானிறுத்து
பாப கர்மங்கள் துலைந்துவிடப்
பதமா யுடம்பெலாந் துவாலையிட
கோப மில்லாத கடுப்புகளும்
குணமாய் வாதமும் போய்விடுமே. (255)

கடுப்பு வாதத்திற்கு.

வாதம் போய்விடக் கியாழமது
வகையாய்க் கேளும் ருக்மானே
சேதம் வராமற் சதகுப்பை
சிறந்த சுக்கொடு வாய்விளங்கம்
பேதமில் லாத மிளகுமல்லி
பிறங்குங் கடுகு நொச்சியிலை
நாத னருளால் வகைக்கிரண்டு
நன்றாய் விராக னிடைவாங்கே. (256)

வாங்குஞ் சரக்கை வறுத்துடனே
மகிழ்வாய்ப் பானை தனிலிட்டுத்
தாங்கும் நாலு படிதண்ணீர்
தக்க படியாய் விட்டுப்பின்
ஓங்கும் யெட்டொன் ருய்க் காய்ச்சி
ஒழுங்கா யரைக்காற் படிவீதம்
பாங்காய் மூன்று நாளருந்தப்
பாரா தோடும் வாதமுமே. (257)

ஒடுங் குடல்வாதம் வந்துதானல்
உற்ற குணங்களைத் தான்கேளு
ஆடுங் குடலுங் குமுறி நிற்கும்
அப்பாற் புரண்டு இறைச்சல்தருங்
கூடும் வயிறுமந்த மாய்க்காணும்
கொடிய வலியுண்டு வாந்திவரும்
நாடுங் குடல்வாத மிக்குணமாம்
நன்று யறிந்து நீ மருந்துசெய்யே. (258)

அறிந்து குடல்வா தந்தீர
அப்பா பிட்டொன் றைக்கேளு
தெரிந்த வெள்ளாட்டுப் புழுக்கைதனைத்
திறமாய் நாலு படிகொணர்ந்து
செறிந்த ஆறு படிதண்ணீர்
திறமாய் விட்டு வேடுகட்டி
விரிந்த கருங்குரு வையரிசி
மிகவே அரைப்படி திரித்தெடுத்தே. (259)

எடுத்த மாவதை வேடில்வைத்து
யிதமா யெரித்துப் புட்டவித்துக்
கடுத்த மாகச் சுடச்சுடவே
காராட் டின்நெய் யைக்கலந்து
விடுத்த சர்க்கரை யுஞ்சேர்த்து
மிகவு மூன்றுநா ளாறுவேளை
அடுத்துச் சாப்பிடு உப்புப்புளி
ஆகாவ மூம்நாள் தலை முழுகே. (260)

குடல் வாதத் தைலம்.

தலைதான் முழுகத் தைலமதைத்
சாற்றக் கேளு ருக்மானே
மலையா நல்லெண்ணெய் காற்படியும்
வகையாம் வேப்பெண்ணெய் காற்படியும்
நிலையா மணக்கெண்ணெய் காற்படியும்
நேராய் வாங்கி வைத்தேதான்
கலையா மூன்று மொன்ருக்கிக்
கருத்தாய்ச் சட்டியிற் ருனுமிடே. (261)

சட்டி தன்னில் விட்டபின்பு
சரியாய்க் கிளாச்சி யிலையோடு
விட்டுப் பின்பு பிரமியிலை
வேணும் வாத மடக்கியிலை
சிட்ட மூடனே வகைக்குவகை
திடமாய்க் காற்படி சாறெடுத்து
மட்டம தான யெண்ணெய்யுடன்
வகையாய் விட்டுப் பின்கேளே. (262)

கேளே வசம்பு வெள்ளுள்ளி
கிருபை யுடனே வகைக்குவகை
நாளே மூன்று விராகனிடை
நலமாய் வாங்கித் தானரைத்துக்
கோளே யொன்று மில்லாமற்
குறிப்பா யெண்ணெய் யுடன்கரைத்து
வாளே தானும் அடுப்பேற்றி
வகையாய் மெழுகு பதங்காய்ச்சே. (263)

காய்ச்சி யெடுத்துத் தைலமதைக்
கணக்காய்த் தேய்த்து முழுகிவர
ஆச்சி யுடனே குடல்வாதம்
அகன்று போகு மிதுபோல
மாட்சி யுடனே ஒருவாரம்
வகையாய் முழுகத் தீர்ந்துவிடும்
தாட்சி யில்லா ருக்மானே
சகலரு மறியச் சொன்னேனே. (264)

சொன்ன வாதச் சொறிசூலே
சுகமாய்த் தானும் வருமாகிற்
சின்ன மான சொறியுடனே
தினவுந் தடிப்பு முண்டாகுங்
கன்ன லான சட்டியினிற்
கருணை யுடனே பதக்குநீர்
மின்ன லாகத் தான்விட்டு
மிகவும் வைத்துக் கொண்டேதான். (265)

கொண்ட வுடனே கொடிவேலிவேர்
கூராய்ப் பத்துப் பலம்போட்டு
பண்ட மான அடுப்பேற்றிப்
பரிவா யெட்டிலொன் ருய்க்காய்ச்சிக்
கண்ட படியாய்த் தான்நிறுத்துக்
கணக்காய் வேரைச் சட்டியிட்டு
விண்ட எள்ளெண்ணெய் யொருபடியை
மிகவும் ஊற்றி யடுப்பேற்றே. (266)

ஊற்றி யொருபலஞ் சீரகத்தை
உண்மை யுடனே தானரைத்து
நேர்த்தி யுடன்காற் பலவெண்ணெய்
நேரா யிரண்டுந் தான்போட்டு
மாத்தில் லாம லடுப்பெரித்து
வாகாய் மெழுகி பதத்திறக்கித்
தேத்தி முழுகிக் கொண்டுவர
தினவுஞ் சொறிசூலே போய்விடுமே. (267)

மண்டைச் சூலைக்கு.

போமே மண்டைச் சூலைவரிற்
புண் ணும் புழுவுந் தலையில்வரும்
தாமே அதற்கு மருந்துதனைச்
சாற்றக் கேளும் ருக்மானே
நாமே சூரிய காந்தியிலை
நன்று யொருபிடி கொண்டுவந்து
வாமே பாரு சட்டிதனில்
வகையாய்த் தண்ணீர் படிவாரே. (268)

வார்த்துச் சட்டிமேற் குச்சிவைத்து
வகையா யிலையை அதிற்பரப்பி
சேர்த்து மறுசட்டி தான்மூடி
திறமாய்த் தீயுந் தானெரித்து
பார்த்து அவித்த வுடனே நீ
பதமாய்ப் பார்த்து யிலையெடுத்து
கார்த்துத் தலைதனிற் றன்பரப்பிக்
கணமாய்த் துணிபோட்டுக் கட்டிவிடே. (269)

கட்டிடு யிதுபோல் மூன்றுநாள்
கணக்காய்ச் செய்யச் சூலையுடன்
திட்ட முடனே புண்புழுவுந்
திறமா யோடிப் பறந்துவிடும்
சட்ட முடனே நாலாநாள்
தக்க படியே காய்ந்துவிடும்
இட்ட முடனே சுகமாகும்
யிதுதான் நல்ல முறையாமே. (270)

பைத்திய தோஷத்திற்கு.

நல்ல பைத்திய தோஷத்திற்கு
நலமாய்க் கியாழந் தான்கேளும்
மெல்லுஞ் சுக்கு யேலமல்லி
விராக னிடைரெண்டு தானிடித்து
வல்ல பேய்ப்புடல் நிலவேம்பு
மாவீர்க் குடன்வேப் பீர்க்கின் னுஞ்
செல்லுங் கோவைத் தண்டுடனே
சீந்தித் தண்டுந் தான்வாங்கே. (271)

வாங்கி யரைப்பலந் தானெடுத்து
வகையா யாவுஞ் சட்டியிட்டுப்
பாங்கா யிரண்டு படிதண்ணீர்
பண்பாய் விட்டு அடுப்பேற்றி
தாங்கி யெரித்து யெட்டிலொன்றாய்த்
தானே காய்ச்சி வடித்துக்கொண்டு
ஓங்கி யொருநாளைக் கிருவேளை
ஒழுங்காய்ச் சாப்பிட்டு வருவாயே. (272)

வருவா யிப்படி மூன்றேநாள்
வகையாய்ச் சாப்பிடு பத்தியங்கேள்
திருவா யுப்பு புளிதள்ளிச்
சேரும் புகையிலை தான்தள்ளிக்
கருவா யெட்டு நாள வரையும்
கருத்தாய்ப் பத்தியந் தானிருக்கத்
தருவாய் வந்த பைத்தியமுந்
தக்க தோஷமுந் தீர்ந்திடுமே. (273)

திரு மின்னும் மொருகலிக்கந்
திறமாய்ச் சொல்லக் கேளுமினி
காரு மூக்கரைச் சாரணையைக்
கசக்கித் துளிசார் பிழிந்துகொண்டு
பாரும் எள்ளெண்ணெய் யிரண்டுதுளி
பரிவாய்க் கையிற் றூன்விட்டுத்
தேரு மிரண்டு கையாலே
தீப்போற் றேய்த்து வழிப்பாயே. (274)

வழித்துச் சிப்பியில் வைத்துடனே
வகையா யிரண்டு கண்களையும்
விழிக்கச் சொல்லிக் கலிக்கமதை
விரும்பி நன்றாய்ப் போட்டிடிலோ
பழிக்க வந்திடும் பைத்தியமும்
பாங்கா யோடிப் பறந்துவிடுந்
சுழிவா யின்னொரு முறைதன்னைச்
சொல்லிடக் கேளும் ருக்மானே. (275)

உருக்க முடனே கேசரிப்பால்
உடனே காற்படி நீகறந்து
பெருக்க முடனே உண்டபின்பு
பேருய் நாள்மூன் றுங்கொடுத்து
சுருக்க மாகப் புளிமட்டுஞ்
சுகமாய்த் தள்ளி யிருந்துவிடில்
கிருக்கும் பைத்திய தோஷமெலாங்
கெட்டு ஓடிப் பறந்திடுமே. (276)

ஓடும் போது தோஷித்தால்
உடனே சுக்கு தேசாவரம்
நாடி வகைக்கரைக் காற்பலமும்
நலமா யாடா தோடையுடன்
தேடியொருபிடி கொண்டுவந்து
திறமாய்த் தண்ணீர் யிரண்டுபடி
சாடும் படியே நீவிட்டுச்
சரியாய்க் காற்படி யாய்க்காய்ச்சே. (277)

காய்ச்சி யெடுத்த தண்ணீரைக்
கருத்தா யரைக்காற் படிவீதம்
பாய்ச்சி யுடனே கொடுத்துவிடு
பண்பாய் வரட்சியுந் தாகமும்போம்
தாட்சி யிலாமல் மூன்றுநாள்
தக்க படியாய்க் கொடுத்துவர
மாட்சிமை யான தோஷமும்போம்
மலங்கட் டிக்கொண் டாற்கேளே. (278)

பேதிக்கு.

கேளே வயிறு கழியுதற்குக்
கிருபை யுடனே மருந்துசொல்வேன்
நாளே இஞ்சி கொண்டுவந்து
நலமா யரைத்துச் சார்வாங்கிக்
கோளா றென்று மில்லாமல்
குறிப்பாய்ச் சாற்றை முறித்துடனே
வாளே கடுகு ரோகணியும்
வாங்கரை விராக னிடைதானே. (279)

தானே சாறு விட்டரைத்தச்
சாற்றிற் றக்க படிகரைத்துக்
கானே கொடுக்க வயிறுபோகுங்
கணக்காய்ப் போனபின் நிறுத்துதற்குக்
கோனே வசம்பு நீவாங்கிக்
குறிப்பாய்ச் சுட்டுச் சாம்பலோடு
தேனும் விட்டுத் தான்குழைத்துத்
திறமா யுள்ளே கொடுத்துவிடே. (280)

கொடுத்து விடவே நின்றுவிடும்
கூரா யிரண்டு நாள்வரைக்கும்
அடுத்துப் பழங்காய் கனிகளையும்
அன்பாய்க் கொடுக்க லாகாது
விடுத்துப் பத்திய மாகவேதான்
வேண்டி யிருந்தாற் ரேஷம்விடும்
தடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால்
தான்வயிற் றுப்போக் குண்டாமே. (281)

உண்டாம் சூட்டிற் கழிச்சல்வரில்
உடனே மருந்து தான்கேளு
கண்டு புளித்த மோர்வாங்கிக்
கருத்தா எலுமிச்சம் பழம்பிழிந்து
விண்ட வுடன்ரெண்டுந் தான்கலக்கி
மிகவே குடித்திடக் கழிச்சல்நிற்கும்
கொண்ட போது நில்லாட்டாற்
குணமாய் மருந்து தான்கேளே. (282)

மருந்தாஞ் சீரகம் பலம்வாங்கி
வகையா யிருபடி நீர்விட்டுப்
பொருந்த வெட்டொன் றுய்க்காய்ச்சிப்
புகழா யிருத்து யிருவேளை
அருந்தக் கொடுத்துப் புளிதள்ளி
அப்பா மூன்று நாளிதுபோல்
சுருந்தச் செய்தாற் கழிச்சலுந்தான்
சொல்லா தோடிப் பறந்திடுமே. (283)

மூலச் சூட்டுக்கு.

பறக்கு மூலச் சூட்டுக்குப்
பாங்காய் மருந்து தான்கேளு
சிறக்கு மிருப்புச் சட்டிதனைத்
திறமாய்க் காய வைத்தேதான்
சுறக்கும் ஆவின் வெண்ணெய்தனைச்
சுகமாய் விளாங்காய் போலுருட்டி
நிறக்கும் படியே சட்டியிட்டு
நேரா யுருக விட்டுவிடே. (284)

விட்டுச் சீரகம பலமரைக்கால்
மிகவே போட்டு வேகவிட்டு
பட்டுப் போலே காய்ச்சியபாற்
பார்த்து அதிலே கொட்டிவிடு
திட்ட முடனே மூன்றையுமே
சேர்த்துப் பின்பு வெண்ணெய்யிட்டுச்
சட்ட பனங்கற் கண்டையுமே
தானதிற் போட்டுக் கலக்கியுண்ணே. (285)

கலக்கி இவ்வித மொருவாரங்
கணக்காய்ச் சாப்பிடு சரியாகத்
துலக்க மாக அனுதினமுஞ்
சுகமாய்ச் சாப்பிட்டு வருவாயேல்
நலக்க மான அசதிகளும்
நல்ல மூலச் சூடுகளும்
சலக்க மில்லா தோடிவிடும்
சரியாய்ச் செய்து தான்பாரே. (286)

மூல வாய்வுக்கு.

பாரே மூலவாயு வரிற்
பரிவாய்க் கழிச்சலுஞ் சீயும்விழுஞ்
சீரே எச்ச வாயெரியும்
திறமாய் மலத்துடன் ரெத்தம்விழும்
நேரே கடுப்பு அதிகம்வரும்
நிறையாய்க் கால்கை யசதிதரும்
சேரே யிதற்கு மருந்துதனைச்
சிறப்பாய்ச் சொல்வேன் ருக்மானே. (287)

சொல்லுஞ் சேனைக் கிழங்குதனைச்
சுகமாய் வாங்கி வாட்டியேதான்
நல்ல தோலை யுரித்துவிட்டு
நலமா யருந்திட மூலமும்போம்
வல்ல கோழி முட்டைதனை
மறைவாய் ஜலத்திற் றுனவித்து
வெல்ல மாக மூன்றேநாள்
திறமா யுண்டிடப் போய்விடுமே. (288)

வாந்தி பேதிக்கு.

சேர்க்கும் வாந்திபேதி வரிற்
றிறமாய் மருந்து தனைக்கேளும்
ஏற்கை யுடனே வசம்புமஞ்சள்
யிதமாய்ச் சுக்கு மிளகுடனே
பார்க்கக் கொஞ்சங் கொஞ்சமதாய்ப்
பரிவா யரைத்து யெடுத்துவைத்துத்
தீர்க்க முடனே பழந்துணியிற்
றிறமா யொருபக்கந் தான்தடவே. (289)

தடவிப் பின்பு மறுபக்கந்
தானே சுண்ணந் தான்தடவி
அடமாய்த் துணியைக் காயவைத்து
அன்பா யெடுத்துச் சட்டியிட்டு
நடமாய் வசம்பொன்று மஞ்சளொன்றும்
நறுக்கி அத்துடன் தான்போட்டுத்
திடமாய் வறுத்துக் கருக்கிவிட்டு
சேரு மிரண்டு படிநீரே. (290)

இரண்டு படிநீர் தானுமிட்டு
இதமாய்க் காற்படி யாய்க்காய்ச்சித்
திரண்ட காற்படி தண்ணீரைத்
தீர்க்க முடனே தானருந்த
முரண்டாய் வந்த பேதியுந்தான்
முடிவாய் நின்று போய்விடுமச்
சுரண்டா மிந்தக் கியாழமதைச்
சுகமாய்க் கொடுக்க நலம்பாரே. (291)

அரோசி கத்துக்கு.

நலமா யரோசிக மானுக்கால் நல்ல கியாழ மதுகேளு
தலமாஞ் சுக்கு மிளகுமல்லி தக்க மதுரமு நெற்பொரியும்
பேலமாய் மாவீர்க்கும் வேப்பீர்க்கும் பேய்ப்புடல் நெல்லி யீர்க்குந்தான்
கலமாம் வில்வ யிலையுடனே கணக்காய்ப் பிடிபிடி கொண்டுவந்தே. 292

கொண்டு வந்த சரக்கையெலாங்
கூரா யொருசட்டி தன்னிலிட்டு
பண்டு யிருபடி நீருவிட்டுப்
பதமாய் நாலத்தொன் ரூய்காய்ச்சி
விண்டொரு நாளைக் கிருவேளை
மிகவு மறைக்காற் படிகுடிக்க
மண்டும் பித்தம ரோசிகமும்
மருண்டு வெருண்டு ஒடிடுமே. (293)

வாய்ச் சூலைக்கு.

ஓடி விட்ட வாய்ச்சூலை
உண்ணும் வாயில் வந்தாக்கால்
நாடி வாயு மூதடுகளும்
நாவும் புண்ணாய் வெந்துவிடும்
தேடிச் சீரகம் சீனிதனைச்
சேர்த்து மென்று விழுங்கிவிட்டு
காடி நல்லெண்ணெய் சீரகமுங்
கடிதாய்ப் பிசைந்து தின்றுவிடே. (294)

தின்ற வுடனே சூலையும்போம்
சிரங்கு வந்தால் மருந்தினைக்கேள்
நின்றரி தாரங் காற்பலமும்
நேரா மனோசிலை காற்பலமும்
சென்ற சேங்கொட்டை விராகனென்றும்
சீராய் நிம்பெண்ணை காற்படியும்
அன்றே நான்குந் தான்சேர்த்து
அடைவாய்க் காய்ச்சும் பொழுதேதான்
என்ற சேங்கொட்டை வெடித்தவுடன்
இறக்கிச் சேங்கொட்டை எடுத்துவிடே. (295)

இறக்கித் தண்ணீ ரதனில்நல்ல
யிதமாய் வடித்த வெண்ணெய்தனைச்
சிறக்க நின்றிடு மெண்ணெய்தனைச்
சிரங்கிற் பூசித் தேய்த்துக்கொண்டு
நிறக்க அரப்பு தனைத்தேய்த்து
நேராய்க் குளிக்கச் சிரங்குகள்போம்
பறக்க ஒருவா ரந்தானும்
பாங்கா யிதுபோற் செய்துவிடே. (296)

வெள்ளை வீழ்தலுக்கு.

செய்து நீரில் வெள்ளைவிழிற்
சிறப்பா மருந்து தனைக்கேளு
உய்து கண்டு வணங்கியிலை
உயர்வாய்ச் சாறு தான்வாங்கி
எய்து சீரக மும்போட்டு
இயல்பா யூற வைத்தெடுத்து
நெய்து யிரண்டுஞ் சேர்த்தெடுத்து
நேராய் மூன்று நாளருந்தே. (297)

அருந்தி வந்தாற் புளியுப்பை
அகற்றி வருவாய் நின்றுவிடுந்
திருந்தப் பைத்தியங் குறைந்தாக்காற்
றீரும் வியாதியைக் கேளாது
செருந்து பார்த்துச் செய்துவந்தால்
சீராம் நாளும் வாராது
பரிந்து யிந்த மருந்துதனைப்
பாங்கா யருந்திக் குணம்பாரே. (298)

மேக வூரலுக்கு.

பாரே மேக வூறல்வரிற்
பண்பாய் மருந்து தனைக்கேளு
நேரே சங்க வேரதனை
நேர்ந்தா வின்பால் விட்டரைத்து
சீரே பத்து நாள்வரையுஞ்
சிறப்பா யுண்டு வந்திடவே
வேரே மேலிற் காசுகள்போல்
விழுந்த மேகம் போய்விடுமே. (299)

மேகம் போய்விடும் பத்தியத்தை
விரும்பிக் கேளும் ருக்மானே
தாக மாக மருந்துதனைச்
சாப்பிட்ட பின்பு மறுபத்யஞ்
சோக மாக யிருபதுநாள்
சுகமாய் பத்திய மூங்காத்தால்
வேக மாக வூறலறும்
விரும்பிய வுனக்குச் சொன்னேனே. (300)

இளைப்புக்கு மருந்து.

சொன்ன இளைப்பு வருமானாற்
சுவாச மூச்சுட னிருமல்வரும்
நன்னு மதற்கு மருந்துதனை
நாட்ட முடனே சொல்லுகிறேன்
என்னும் விஷ்ணு கிரந்தியுடன்
யியல்பாங் கோரங் கிழங்குடனே
மின்னுஞ் சட்டி தன்னிலிட்டு
மிகவே தண்ணீர் படிவாரே. (302)

படி நீர் வார்த்து அடுப்பேற்றிப்
பாங்காய்க் காற்படி யாகவைத்து
குடி நீர் போலத் தேனைவிட்டுக்
குறிப்பாய்த் தானு மருந்திவர
பிடி நீ ரிளைப்புங் குறைந்துவிடும்
பேராய்ப் பத்திய மதைக்கேளு
அடி நீ ராகிய புளிதன்னை
அகற்று மிளைப்புப் போய்விடுமே. (302)

விக்கலுக்கு மருந்து.

விடுமே விக்கல் வந்தாக் கால்
வேண்டு மருந்தை நீகேளு
நடுவே பழைய செருப்புதனில்
நன்றாய்ப் பிஞ்ச தோலெடுத்து
மடுவே தீயி லேகருக்கி
வைத்துச் சாம்ப லாயெடுத்து
கொடுவே தேனிற் றான்குழப்பிக்
கொடுக்க விக்க லுடன்போமே. (303)

போமே யின்னு மொருவிதத்தைப்
புகலக் கேளும் ருக்மானே
தாமே நண்டுக் குழிநீரைத்
தயவா யெடுத்துக் கொண்டுவந்து
நாமே நல்ல குடிநீராய்
நலமாய் வைத்துக் கொடுப்பீரேல்
ஆமே விக்கல் தான்போகும்
அடைவாய்ச் சொன்னே னறிவாயே. (304)

பெரும்பாட்டுக்கு மருந்து.

அறிவாய் பெரும்பா டானுக்கால்
அதற்கு மருந்து வகைகேளு
தெரிவாய் பழம்பட் டுத்துணியைச்
சீராய்க் கருக்கிக் கருக்கெடுத்து
உரிய நெற்பொறி யைக்கருக்கி
உண்மை யுடனே தான்கலந்து
பெரிதா யிரண்டுந் தூள்செய்து
பேணித் தின்னக் கொடுப்பாயே. (305)

கொடுநீ மூன்று நாள்தானுங்
குணமா யொன்பான் வேளைமட்டும்
எடுநீ இந்தத் தூளதனை
யிதமாய்ச் சாப்பிட் டடைவுடனே
நடுநீ காரமதைத் தள்ள
நல்ல பெரும்பா டோடிவிடும்
விடுநீ வயித்திய மூந்நூறும்
விரும்பி சொன்னேன் முற்றுமிதே. (306)

யாகோபு வைத்தியம் 300

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# புதிய புத்தக கேட்லாக்

## இ. ராம. குருசாமிக்கோனார் சன்

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

## சித்தவைத்திய அகராதி.

( இது ஓர் பெரிய வைத்திய அகராதி. )

பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்கள், பஞ்சபூதச் சரக்குகள், உபரசச் சரக்குகள், 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகைகள் உப்பாகுஞ்சரக்குகளின் விபரமும், மருந்துகள் செய்யச் சரக்குகளின் சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரமும், 64 பாஷாணங்களின் பெயர்களும், அதற்கு சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும், 4448வியாதிகளின் விபரங்களையும் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தைப் பார்க்க வேண்டிய தவசியம். 280 பக்கங்கள் கொண்டது. புத்தகம் 1க்கு ரூ 2...0...0

## அகத்தியர் பரிபாஷை 300.

ஓலைச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் அச்சிட்டு வெளிவந்தது (பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் முன்னம் இருந்து வருவதில் இது பின்பாகம் மூன்று காண்டங்கள் புதிதாக இப்பொழுது அச்சிட்டது புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## அகத்தியர் கற்ப முப்புக் குருநூல்

இதில் கற்பம், கற்ப தீட்சை, முப்பூ முடிக்கும் விபரம், பற்பம் செந்தூர முறைகள், சுண்ணம், மெழுகு, தைலம், வாலை பூஜா விதிகளும் தெளிவாகச் சொல்லியது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் இதுவரையும் வெளி வராதது இதில் ஞானம்,யோகம், இன்னதென அவரவர்களே எளிதில் தெரிந்து கொள்வதுடன் தன்னைத் தானறிந்து ஞான யோக சாதனை யடைந்து கற்ப தேகி யாகும் விபரங்களும் சொல்லி யுள்ளது. புத்தகம் 1க்கு விலை ரூ. 2—0—0

அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம். வைத்திய காண்டம், வாத காண்டம், சுண்ணக் காண்டம், செந்தூரக் காண்டம், பற்ப காண்டம், தைலக் காண்டம், கற்ப காண்டம், யோக ஞான காண்டம், தீட்சா விதிகாண்டம், சாபநிவர்த்தி காண்டம், ஜால காண்டம், மந்திர காண்டம், ஆக 12 காண்டங்கள் புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

மணக் கோலம் 200, கனக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிறுக்கு நூல் என்னும் கிரிகை சாஸ்திரம் ஆ 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாசாணங்க ளில்லாது கடைச் சரக்குகளைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல ரோய்களையும் தீர்க்கும் முறைகளைச்சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களும், தெளிவாகக் கூறியுள்ள அரிய சாஸ்திரம். இதுவரை வெளிவராத நூல், புத்தகம் 1க்கு அணா 0...12...0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.
புத்தகம் 1-க்கு விலை அணா 0—3—0

# அகத்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் ஏட்டுப் பிரதியாக அனுபவத்தில் யிருந்து வந்தது இம் முறைகளை யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம், மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க பாகங்களாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

## அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இதில் பதினெண் சித்தர்களால் பாடிய நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அதிலுள்ள மர்மமான பதங்களை புலத்தியர் கேட்க அகத்தியர் அதன் தாத்பரியங்களை தெளிவாகச் சொல்லியது.

புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

## அகத்தியர் பூஜா விதி 200.
## ஞான சைதன்யம் 51ம் சேர்ந்தது.

இதில் சிதம்பரச் சக்கரமும் ஷை பூசையும் அட்ட கன்ம பூசா விபரங்களும், தேவி பூசா மார்க்கமும், மவுன யோக ஞான சாதனம் விபரமாய்க் கூறியுள்ளது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## அகத்தியர் வகார சூத்திரம் 200.
### ஷை சுருக்கம் 100ம் சேர்ந்தது.

இதில் வகார முறைகளும், யேக மூலிகை யின்ன தென்ற விபரமும் குரு முடிக்கும் விபரமும் தெளிவாய் யாவருக்கும் நன்கு புலப்படு வண்ணம் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெளளைப் பாஷாணம் மூலிகை என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வகாரம் முடியு மென்றும், ஓம் என்றதின் பொருள் இன்ன தென்றும், இன்னு மநேக பரிபாஷைப் பெயர்களையும் விபரமாகச் யிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடு விதமும், அக்காலத்தில் ஏற்படும் சூடு சோபதாபங்களுக்கு வேண்டிய கிசாயங்களும், ஸ்நானம் செய்யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங்களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் செய்ய வேண்டிய முறையும், வாத முறைகளும், சுத்தி முறைகளும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம். புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

## உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது. இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 மட்டுந்தான் முன் அச்சிட்டிருக்கிறது இப்பொழுது இந்தப் பரிபாஷை 300 அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

# கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500 ரில் கடைக்காண்டம் 500 மாத்திரம் முன் அச்சிட்டிருக்கிறது முதல் காண்டமும், நடுக்காண்டமும் இதுவரை கிடைக்காமலிருந்து இப்பொழுது நடுக்காண்டம் 500 மாத்திரம் ஒரு ஏட்டுப் பிரதி கிடைத்து அச்சிட்டிருக்கிறது.

புத்தகம். 1-க்கு விலை அணா 0—10—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

ஞானவெட்டி 1500-க்கு சூஸ்திரமான

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் பூநீர் முப்பூ வழலை விபரங்களும், தெளிவாகக் கூறியுள்ளது புத்தகம் 1க்கு விலை அணா 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகம் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள் மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும், யோகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது புதிதாக அச்சிட்டது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இதில் ரசவாதத்துக் குறிய செம்புவேதை, செம்புச் செந்தூர வேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தகத் தைலம், நாகரச கெந்தி, தைலத்தின் பெருமை, தங்க உரம், வெள்ளி உரம், செய்யும் முறைகளும். சரக்கு கட்டு வகைகளும், செந்தூரம், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாக ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

# காகபுசண்டர் 1000.

இவர் பிரளயகாலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலத்தையும் பார்த்துவந்தவர். இவர் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இதுவரை ஏட்டுப் பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரமும் இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250 - பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

# யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவராக இருந்து பின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசியதில் அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர் கொடுத்தார்கள். பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோக முறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புத்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோக முதலிய விபரங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானையாகவும், பல சந்தங்களாக இக்கலியுக தருமம் எவ்விதம் நடைபெறு மென்பதை விபரமாயும் சூட்சம மாயும் சொல்லியிருக்கிறது.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

# இராமதேவர் சிவயோகம்

இதில் யோகம், நிஷ்டை மார்க்கம், வகாரம், மருந்து, பஞ்ச பூதங்களின் விபரம், முதலிய வகைகளை விபரமாகக் கூறியிருக்கிறது. 200 பாடல்கள் அடங்கியது. புத்தகம் 1க்கு விலை அணு 0...6...0

# இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகள், சத்துரு மித்துருச் சரக்குகள், தைலமுறைகள், வைத்திய முறைகள், அஷ்டகர்ம விபரங்கள், கருமான விபரக்களும், பஞ்ச பூதங்களின் விபரம், பற்பம். செந்தூரம், சுண்ணம், செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை ரூ 1—0—0

## விஷ வைத்திய மென்னும்

# "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பது ஆரூட சாஸ்திரங்கள் ஒரேபுத்தகமாகச் சேர்ந்துள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, பூரான், செய்யான், வண்டு, முதலானவைகளால் விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச் சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்கு எளிய முறைகளாய்ச் சமயோசிதம் போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. 392-பக்கங்கள் கொண்ட புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

## உலகரகசிய வெளிப்படை யென்னும்பஞ் சலட்சணத்

# திருமுக விலாசம்.

சோதிடர், வைத்யர், சாமியார், கோடாங்கி, தட்டார், தாசி, காசுக்கடைக்காரர், ஜவுளிக்கடைக்காரர், லேவாதேவி செய்வோர், முதலான வர்கள், தங்கள் சாமர்த்தியத்தால் ,பிறர்கள் தெரிந்துகொள்ளா வண்ணம், செய்யும் ஏமாற்றங்களையும், சாமர்த்தியங்களையும், வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிறது இதை வாசிப்போர் கேட்போர் பிறர்களிடம் எவ்வகையிலும் ஏமாந்துவிடாது இருந்துகொள்ளலாம் படிக்கப்படிக்க விடாநகைப்பை உண்டு பண்ணும். ரூ 1—0—0

குரு. இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை,

## கோரக்கர் மலைவள சாஸ்திர மென்னும்

# மலை வாகடம்.

இந்நூலில் திருவனந்தபுரம் பென்னும் மலையாள எல்கையி லிருந்து நீலகிரி மலை வரையிலு முள்ள எல்லா மலைகளையும், அம் மலைகளில் ஆங்காங்கு கிடைத்தற் கரிதாகிய பொருள்களையும், சித்தர்கள் குகை வாசஞ்செய்து வந்த இடங்களையும், முப்பூவின் மர்மங்களையும், உதகங்களின் விபரங்களையும், மூலிகை, கற்பம், இவைகளிருக்கு மிடங்களையும், அவைகளை எடுத்து உபயோகிக்கு மார்க்கங்களையும் யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளு வண்ணம் வசன ரூபமாகக் கூறியிருக்கிறது. கிளேஸ் கடிதம் புத்தகம் 1க்கு விலை ரூ 1...8...0

## சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு

இதில் சோலைமலையி லெழுந்தருளியிருக்கும் அழகமலையாண்டாரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலை விசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலை போகும் வரை பூராவும் வர்ணிப்பாகப் பாடியிருக்கிறது. விலை அணா 0—2—0

## கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடித்துக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி யாடிகளுக்கும், ஆருடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் மிகவும் முக்கியமானது. புத்தகம் பாகம் 1-க்கு விலை அணா 0—3—0

## அருணகிரி நாதர் திருப்புகழ்

### அரும்பதவுரையுடன்

சிவசுப்பிரமணியக்கடவுள் அருட்பிரசாதத்தால் அருணகிரிநாத சுவாமிகள் பாடியுள்ள சில முக்கிய திருப்புகழ் பாடல்களுக்கு தமிழ் சங்கத்தாரால் அரும்பதவுரை யெழுதியுள்ளது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

இருபத்தோர் நூல்களடங்கிய

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

# புதிய சாஸ்திர கோர்வை.

அகத்தியர் பாடிய லெட்சக்கணக்கான நூல்களில் சில நூல்கள் மட்டும் அச்சிட்டு வெளி வந்திருக்கிறது. என் கைவசமுள்ள ஓலையேட்டுச் சுவடிகளில் அகத்திய முனிவரால் பாடியுள்ள சுவடிகளை அச்சிட்டுக் கோர்வையாய்ச் செய்து வெளியிட வேண்டுமென்ற எண்ணத் துடன் இப்பொழுது புதிதாயச்சிட்டுக் கோர்வையாக வெளியாக்கி யுள்ளேன். இந்நூற்களில் மானிட சென்மம் யெடுத்த நாம் இச்சென்மம் கடைத் தேரும் பொருட்டு ஞானம் அடையவும் அதற்கு முதன்மையாகத் தெரிந்து கொள்ள வேண்டிய தீட்சை முறைகள், யோக அப்பியாச முறைகள், கற்ப சாதனை முறைகள், பத்திய பாக முறைகள் அதற் குறிய வைத்திய சிகிட்சை முறைகள், இன்னுமநேக விஷயங்களை எழிதாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விபரங்கள் பூராவுமடங்கியது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 9—0—0

எப்பொழுது அச்சிட்டு வருமென எதிர்பார்த்திருந்த அ. சங்கரமூர்த்திக் கோனாரவர்களால் பாடிய ஸ்ரீமத்

# பாகவத அம்மானை.

ஆப்டோன் சித்திரப் படங்களுடன்

எண்ணுதற் கரிதான ஸ்ரீகண்ணன் லீலையெனும் ஸ்ரீமத் பாகவதத்தை அ. சந்தரமூர்த்திக் கோனாரவர்களால் அம்மானைப் பாவாக விசித்திர விநோதமாகவும் சொன்னயம் பொருணயம் முதலிய 10 வித அழகும் பொருந்தக் கடல் மடை திறந்த வெள்ளம் போல் பாடியுள்ளது கதைபாடும் மற்ற அம்மானைகளைப் போல் நினைக்கவேண்டாம் இப் பாடல்கள் இலக்கணம் இலக்கியத்துடன் வெண்பாச் சீர்களாக உவமானம் உவமயத்துடன் ஆழ்ந்த கருத்துகளமைத்துக் கூறியிருப்பதால் இது கவிவாணர்களும் மற்றுள்ளோர் யாவர்களும் வாங்கிப் படித்து ஆனந்திக்க வேண்டிய் தவசியம் ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த அத்தியாயமான 10, 11. 12, ஸ்கந்தங்கள் முடிய திக்கு கடிதத்தில் சுத்தப் பதிப்பாக அச்சிட்டு 400 பக்கங்கள்கொண்ட பெரிய புத்தகமாக கலிக்கோ பயிண்டு செய்த புத்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

குரு. இராமசாமிக்கோனார் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

### வைத்திய வாத யோக

# ஞான சாஸ்திரத் திரட்டு.

பதினெண் சித்தர்களால் கூறிய லட்சக்கணக்கான சாஸ்திரங்களில் சிற்சில நூல்கள் மட்டும் அச்சிட்டு 18 சித்தர்கள் ஞானக்கோர்வை யென விற்பனை செய்து வருகிறது. இன்னு மநேக சாஸ்திரங்கள் ஏட்டுச்சுவடியிலிருந்ததை ஆங்காங்கு சென்று ஏராளமான பொருள் கொடுத்து வாங்கி வந்து 10 பாகங்களாக அச்சிட்டு பாகம் 1-க்கு 30 முதல் 40 நூல் சேர்த்து அச்சிட்டிருக்கிறது இது யோக ஞான சாதனமடைய விரும்பும் ஒவ்வொருவரும் வாங்கி தமக்கு இப்பிறவியில் கிடைத்திருக்கிற அரிய மானிடஜென்மத்தைக் கற்பயோக ஞான சாதனைகளால் அழியாது வெகு கால மிருந்து சாயுட்சிய பத மடைவதற்குள்ள மார்க்கத்தை யறிவிக்கும் சாஸ்திரமிதுவே யாகும்

10-பாகங்கள் பாகம் 1-க்கு விலை ரூ 1—4—0

# அகத்தியர் தத்துவம் 300.

### இது சித்தர் பதினெண்பேர் கூறிய நூல்களுக்கும் திறவுகோலாகும்.

இந்த சாஸ்திரத்தில் ஞானத்தின் பெருமையையும், ஞானிகளின் மகத்துவத்தையும், பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய நூல்களிலுள்ள சில முக்கிய மருந்து பாகங்கள் முடிவுக்கு வராதிருப்பதின் காரணமும் அந்தந்த நூல்களில் மறைத்து வைத்த பொருள் இன்னதென விளக்கிக் காட்டியும், அதைச் செய்து முடிக்கக்கூடிய பக்குவத்தையும் கூறியிருக்கிறது அன்றியும் லோகச் சரக்குகளைக் கட்டு முறைகளும் ஆத்மதத்துவம், எட்டணை, தத்துவ தெரிசனம், பஞ்ச பூதத்தின் கூறு வகையையும், மௌனத்தின் விபரம் இன்னதென்பதையும் கற்பத்தின் பெருமையையும், அவைகளைச் சாப்பிடவேண்டிய பக்குவத்தையும் மற்றுமநேக இரகசியங்களையும் வாதகாண்டம், வயித்தகாண்டம், ஞானகாண்டம் யென மூன்று காண்டங்களாகக் கூறியிருக்கிறது சித்தர் நூல்கள் பார்க்கும் ஒவ்வொருவரும் இந்த சாஸ்திரத்தையும் பார்க்கவேண்டியதவசியம். புத்தகம் 1-க்கு விலை ரூ 0—12—0

உ

தேவரிஷி முனிசித்தர்கள் திருவாய் மொழிந்தருளிய
ஞான யோக சாஸ்திர ஆராய்ச்சி நிலையம்,
ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவில் (வடக்கு ஆடி வீதி,)
மதுரை.

ஸ்தாபகர்:-

ந. சுப்பிரமணியபிள்ளை என்ற ஞானபண்டிதஸ்வாமி